1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு பங்குனி மாதம் 31-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 13-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

வெயில் ஆகோரம் தாங்கமுடியாதிருக்கிறது. புழுக்கம் அதிகம். காற்று தூக்கமாய் இருந்துவருகிறது.

### நம்பத்திரிகை

பரிசுத்த வாரத்தையிட்டு வழமைபோல நம்பத்திரிகை அடுத்த 7-ந்திகதி வியாழக்கிழமை வெளிவரமாட்டாது. 14-ந்திகதி வியாழக்கிழமையே வெளிவரும்.

### நமது அச்சியந்திரசாலை

பரிசுத்தவாரத்தையிட்டு இம்மாதம் 6-ந்திகதி புதன்கிழமை மத்தியானந் தொடக்கம் 11-ந் திகதி திங்கட்கிழமை முடிகிறவரையிலே நமது அச்சியந்திரசாலை பூட்டப்பட்டிருக்கும். 12-ந்திகதி செவ்வாய்க்கிழமையே மறுபடிவேலை ஆரம்பமாகும்.

### களவுபோன துப்பாக்கிகள்

லைசென்ஸ்முடிக்கப்பட்ட ஒருபெருந் தொகையான துப்பாக்கிகளும், சுழல் துப்பாக்கிகளும் சமீபத்திலே அவற்றின் சொந்தக்காரரிடமிருந்து களவுபோயிருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. அவற்றிற்சில அரசியல்வாதிகள் உட்பட உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்களுக்குச் சொந்தமான தானியங்கும் கைத்துப்பாக்கிகளாகும். களவுபோன இந்த ஆயுதங்கள் கிறிமினல் குற்றவாளிகள், அல்லது புரட்சிக்காரர் கையில் அகப்பட்டிருக்கவேண்டுமெனப் பொலிசர் சந்தேகிக்கின்றனர். லைசென்ஸ்முடித்த அநேகதுப்பாக்கிகள், சுழல்துப்பாக்கிகள் காணாமற்போய்விட்டதாகச் சமீபத்தில்நடைபெற்ற பஸ்தொழிலாளர் வேலைநிறுத்தத்தின் போதே பொலிசருக்கு அறிவிக்கப்படலாயிற்று.

### ருஷியகோஷ்டிக்கு அனுமதியில்லை

ஆனிமாதம் 20-ந் திகதியன்று உண்டாகவிருக்கும் சூரியகிரகணத்தை இலங்கையிலிருந்து சிறந்தமுறையில் ஆராய்ச்சிசெய்யலாம்; அதனால் இக்கிரகணத்தை அவதானிப்பதற்கென்று ஐம்பதுவிஞ்ஞானிகளையும், வானசாஸ்திரிகளையும் இலங்கைக்கு அனுப்பிவைக்கச் சோவியற்ருஷியா செய்துகொண்ட விண்ணப்பத்தை இலங்கை அரசாங்கம் நிராகரித்துவிட்டது. இந்தச்சோவியற் தூதுக் கோஷ்டிக்கு இலங்கைஅரசாங்கம் அனுமதியளிக்க மறுத்ததையிட்டு 'இஸ்வெஸ்ரியா' என்ற சோவியற்அரசாங்க பத்திரிகை குறைகூறிக் கூச்சலிட்டிருக்கிறது. இந்தக்கிரகணம் வழமைக்கு மாறாக அதிகநேரம்—அதாவது ஏழரைநிமிஷ நேரம் நீடித்திருக்கும்; ஆகையால் ஏனையநாடுகளைப்போலச் சோவியற் ருஷியாவும் இக்கிரகணத்தில் அதிகம் அக்கறை கொண்டிருக்கிறதென்றும் அப்பத்திரிகை கூறியிருக்கின்றது.

### இந்திய கடற்தொழிலாளர்

வருங்காலத்திலே இந்தியகடற்தொழிலாளர்கள் மன்னார்க்கரைநீளம் மீன்பிடிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். மீன்பிடிகாலத்திலே மன்னார்க்கரைக்குவருகிற இந்திய கடற்தொழிலாளருள் அநேகர் உள்நாட்டில் நுழைந்து ஆங்காங்கு குடியேறிக் கள்ளக்குடியேற்றகாரர் ஆகிவிடுகின்றனர். அதனால் இந்தியகடற்தொழிலாளர்களை மன்னார்க்கரைநீளம் மீன்பிடிக்க அனுமதிப்பதில்லையென்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

### கல்வியும் பெற்றோரின் உரிமையும்

கொழும்பிலே முகத்துவாரத்திலுள்ள டி லாசலேகல்லூரியின் பொன்யூபிலிப் பரிசளிப்புவிழா சென்றசனிக்கிழமை நடந்தேறியது. வித்தியாதிபதி திரு. ரி. டி. ஜயசூரிய அவர்கள் விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசியபோது: பிள்ளைகள் அரசாங்கத்துக்கும் அல்ல, வித்தியாபகுதிக்கும் அல்ல, பெற்றோருக்கே உரியவர்களாதலால் தங்கள்பிள்ளைகள் என்னமாதிரியான கல்வி ஊட்டப்பெற வேண்டுமென்பதைத் தீர்மானிக்கும் முதல் உரிமை பெற்றோருக்கேஉரியது; அதனால் ஆசிரியர்கள் பெற்றோரின் உரிமைகளை அவமதிக்கவோ, அன்றேல் அலட்சியம் பண்ணவோ வேண்டாமென்று ஆசிரியர்களுக்கு மனுப்பண்ணிக் கொள்ளுகிறேனெனக்கூறிப் பிள்ளைகளுக்குக் கல்விபயிற்றுதற்கென்று தங்கள் ஆருயிரை அர்ப்பணஞ்செய்துள்ள கிறிஸ்தியன் பிறதர்மாரின் கல்வித்தொண்டுகளைப்பாராட்டினொர்.

### ஆனிமாதச் சூரியகிரகணம்

வருகிறஆனிமாதம் 20-ந்திகதியன்று நிகழவிருக்கும் பூரண சூரியகிரகணத்தை இலங்கையிலிருந்து அவதானிப்பதற்கென்று ஏழுநாடுகளிலிருந்து வானசாஸ்திர ஆராய்ச்சிக் கோஷ்டிகள் இங்குவரவிருக்கின்றன. கனடாதேச கோஷ்டியைச் சேர்ந்தஇருவர் வேண்டியஉபகரணங்களுடன் சென்றவியாழக்கிழமை இங்குவந்து சேர்ந்துவிட்டனர். ஜப்பான், சுவிற்சர்லாந்து, ஒல்லாந்து, இந்தியா, பிரித்தானி, அமெரிக்க ஐக்கியதேசம் ஆகியநாடுகளைச் சேர்ந்த வானசாஸ்திரிகள் இன்னுஞ் சிலதினங்களில் வந்துசேருவார்கள். இந்தியாவிலே உத்தரப்பிரதேச அரசாங்கமும் காசிநகர் வானசாஸ்திர ஆராய்ச்சிநிலையத்தின் தலைவரான டக்றர் கே. வி. சாப்று, உபதலைவர் டக்றர் எஸ். டி. சின்விசால் என்பவர்களும், பண்டைக்கால இந்தியவானசாஸ்திரத்தில் நிபுணரான மற்றொருவருமாக மூன்று வானசாஸ்திரிகளைக்கொண்ட ஓர்தூதுக்கோஷ்டியை அனுப்பவிருப்பதாகத் தெரியவருகிறது. இலங்கைச் சர்வகலாசாலைப் பேராசிரியர் ஏ. டபிள்யூ மயில்வாகனம் அவர்கள் இலங்கைக்கோஷ்டிக்குத் தலைமைவகிப்பார். ஹிங்குறக்கொடை, திரிகோணமலை, சிகிரியா, பொலனறுவை, ஹபறனை ஆகியாம் பல்வேறிடங்களிலுமிருந்து இந்தவானசாஸ்திரிகளின் கோஷ்டிகள் சூரியகிரகணத்தை அவதானிக்கவிருக்கின்றன.



## சதாசகாயமாதா கோணம்

—:—

### முஸ்லீம்மாதின் நன்றித்துதி

மாதம்பையிலஉள்ள உத்தமகத்தோலிக்க குடும்பமொன்றில் வீட்டு வேலைக்கு அமர்ந்திருக்கும் ஓர் ஏழைப்பெண்நான். நான் இஸ்லாம்மதத்தினள். எனக்கு உலகத்திலஉள்ள சொத்து ஒரேஒருமகன். அவனே எனதுதஞ்சமென்று அவனையே கட்டிக்காத்துக்கொண்டிருந்தேன்.

ஆனால், அவன் என்வீட்டைவிட்டு விலகிக் கெட்டதோழர்களுடன் சேர்ந்து, தனஉழைப்புகள் எல்லாவற்றையும் பாழான முறையிற் செலவழித்துத் துர்ப்பழக்கங்களுக் கிரையானதுமல்லாமல், கொஞ்சநாட்களால் அவன் இருக்குமிடம் எதுவென்றுமுதலாயத் தெரியாதுபோயிற்று. இது எனக்கு வெகு அங்கலாய்ப்பைக் கொடுத்தது என்னைப்பார்த்தோர் இலகுக்குப் பைத்தியமாக்கும் என்று சொல்லக்கூடிய நிலைபரத்தில் இருந்தேன். செய்வதென்னவென்று அறியாதுதிகைத்தேன். மாந்திரீகக்காரரின் உதவியைமுதலாய்த் தேடவிரும்பினேன். என்பரிதாபகோலத்தைக் கண்டு என்னோடு அனுதாபப்பட்ட எனதுஎசமாட்டி, சதாசகாயமாதாவின் பரிசுத்த படத்தை எனக்குக்காட்டி அந்தத் திருத்தாயாரில் உண்மையான பத்தி விசுவாசம்வைத்து, அவவை இரந்துமன்றாடினால் அவதப்பாது எனக்கு உதவி செய்வாளென்று புத்திகூறினா.

என்எசமாட்டி சொன்னபடிசெய்தேன். என்னஆச்சரியம்! காணாமற்போனஎன்மகன் என்முன் நின்றான். அதனால் நான்அடைந்த மகிழ்ச்சியையும், அதிசயத்தையும்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? அவன் தான்செய்த குற்றங்களை ஒப்புக்கொண்டு, இனி ஒருபோதும் அவ்வித தீச்செயல்களைச் செய்வதில்லையென்று வாக்குப்பண்ணினான். அன்றுதொட்டு அவன் திருந்தி நல்லொழுக்கமாய் நடந்துவருகிறான். நான்வேலைசெய்யும் இடத்துக்குக் கிட்டடியாக அவனும் வேலைசெய்துவருகிறான். உண்மையாகவே பரிசுத்தசதாசகாயமாதா எனக்குச்செய்த ஒருபுதுமை இதுஎன்பதில் சந்தேகமேஇல்லை. கத்தோலிக்கசமயம் இவ்வளவு பரிசுத்தமானதென நான் இதற்குமுன் அறியவேயில்லை.

இந்தப்பரிசுத்த படத்துக்குமுன்பாக நான்ஒவ்வொருநாளும் மன்றாடிவருகிறேன். பரிசுத்த தேவதாயார்மட்டில் நான்மிகவும் பத்திவிசுவாசம் உள்ளவளாய் இருக்கிறேன்என்று சொல்லத் தேவைஇல்லை.

(மாதம்பையில்வசிக்கும் பத்உம்மா எனும் முஸ்லீம்மாது "நோவனைப் புதினம்" என்னும் ஆங்கிலப்பத்திரிகைக் கனுப்பியநன்றித்துதியின் தமிழ்ச்சாரம்.)

### சந்நியாச பொன்யூபிலி விழா

மாத்தளைநகரில் அழகர்மலையடிவாரத்தில் அமைதியானஓரிடத்தில் நவமாக ஸ்தாபிக்கப்பட்ட ஓர்சந்நியாச சபை உள்ளது. அதுதான் "மரியாயின் பிரான்சிஸ்கனசபை." அதன் அதிசிரேஷ்டராம் அதிசங் சகோதரர் இ. மரியஜோசப், எவ் வீ. எம், சங். சகோதரர் வின்செஸ்ற் கபிரியேல், எவ் வீ. எம். எனும் இருவரதும சந்நியாச வார்த்தைப்பாட்டின் ஐம்பதாம் வருட பொன்யூபிலிவிழா கடந்த 19-3-55 சனிவாரம் வெகு ஆடம்பர சிறப்போடு கொண்டாடப்பட்டது. அத்தருணம் நவமாய்க் கட்டியெழுப்பப்பெற்ற புதிய சந்நியாசமடத் திறப்புவிழாவைபவமும் சிறப்பலங்காரமாய் நடந்தேறியது

இவ்விழாவில் கண்டி மேற்றிராணியாராம் மகாவந். டொன் பேணட் றேஞ்ஞோ, ஓ. எஸ். பீ. ஆண்டவர் அவர்களும, ஓ. எஸ். பீ. சபை அதிசிரேஷ்டரோடு அச்சபைக் குருமார்சிலரும், கொழும்பு அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. றுபேட்பெர்ணண்டோ, ஓ. எம். ஐ., வண. செபஸ்தியான் பெர்ணண்டோ, ஓ. எம். ஐ., வண. மைக்கல் முத்துப்பிள்ளை ஆதியாம் பலகுருமாரும, அர்ச். சூசையப்பர்சபைச் சந்நியாசர்கள்பலரும், மகோன்னுப்பிரான்சிஸ்கன்சபைச் சிரேஷ்டரோடு பலசந்நியாசரும், சங். கன்னியர்பலரும், இன்னும் பலபிரமுகர்களும், மற்றும் ஐந்நூற்றுக்குமேற்பட்ட மக்களும் இலங்கையின் பலபாகங்களிலுமிருந்துவந்து குழுமியிருந்தார்கள்.

வைபவம் காலை 7 மணிக்கு ஆரம்பமானது. முதலாவதாக, மேற்றிராணியாண்டவர் புதுமடத்திறப்புவிழாவைச் சிறப்பாக நடத்தினா. அதன்பின் யூபிலிநாயகர்கள் சம்பந்தமான திருவைபவங்கள் நடைபெற்றன, பின்னர் மேற்றிராணியாண்டவர் அவர்கள் பங்குக்குரவர் வண. போல்சுவாமியாரையும், வண. எம். முத்துப்பிள்ளை சுவாமியாரையும் துணையாகக்கொண்டு திவ்வியபூசை நிறைவேற்றினார். பூசையின் போது வண. செபஸ்தியான் பெர்ணண்டோசுவாமியார் சந்நியாசஅந்தஸ்தின் உந்நதமாட்சிபற்றியும், யூபிலிநாயகர்களின் சேவைகள்பற்றியும் சிறந்தபிரசங்கமொன்று நிகழ்த்தினார். பூசையின் பின் யூபிலிநாயகர்கட்குப் பொன்முடியும், ஊன்றுகோலும் வழங்கும் சடங்கு வெகுவிமரிசையாய் நடைபெறலாயிற்று.

கடைசியாக, யூபிலிநாயகர்கள் எல்லோராலும் அன்போடு உபசரிக்கப்பெற்றபின் சமூகமானோர் யாவருக்கும் சிற்றுண்டியும், பிரமுகர்கட்குக் காலைப்போன்மும், பகல்விருந்தும் அளிக்கப்பட்டன. அனைவரும் யூபிலிநாயகர்களை மனமாரவாழ்த்தவும், மேற்றிராணியாண்டவரும, குருமாரும் பொன்னுரையோடு நல்லாசிகூறவும் யூபிலிவிழா இனிதே முடிபெய்தியது.

— கண்டுகளித்தோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமிகு வன்னிநாடு

(சென்றவாரத் தொடர்ச்சி)

### நாடு காடாதல்

வன்னிநாட்டில் நெடுங்காலம்நடந்த கலகங்களினலும், பலமுறைகளிற் பெய்த பெருமழையினல் உடைந்த குளங்களை மீட்டும் திருத்தாதபடியினலும், காட்டுக்காய்ச்சலினலும் வேளாண்மை அழிந்துவிட்டதால் நாட்டில் வறுமை அதிகப்பட்டது. பண்டாரவன்னியனைச் சேர்ந்தவர்கள் சூறையாடும் கொள்ளைக்கூட்டத்தினராக மாறினர். அவர்கள் கிராமங்களிலும், சிற்றூர்களிலும்நுழைந்து ஆடு மாடுகளை கவர்ந்தும், அகப்படும் பொருள்களைக் கொள்ளையடித்தும் பற்பலகிஷ்டூரங்களைச் செய்துவந்தனர். அநேககிராமங்கள் இதனுல் குடியற்று அழிந்தன. டச்சுக்காரர் ஆட்சி தொடக்கம் வன்னிநாடு குடியேற்ற நாடாக மாறியதற்கு வேறொருகாரணமும் உண்டு. கொழும்பிலிருந்து திரிகோணமலைக்குச் செல்லும்படைகள் வன்னிநாட்டுக்கூடாக — அதாவது முல்லைத்தீவைக்கடந்து செல்லவேரிட்டது. இப்பாதைதான் கொழும்பிலிருந்து திரிகோணமலைக்குக் கிட்டிய பாதை. எனவே, அந்நியதேசப்படையினர் வன்னிநாட்டு மார்க்கமாகச் செல்லும்போதெல்லாம், ஊரில் இருந்தவர்களுக்குச் சொல்லொணுத் துன்பத்தை விளைத்துக்கொண்டே சென்றனர். எனவே, வன்னிநாட்டினர் தமது சொந்தக்கிராமங்களையும், செந்நெற்றுணிலங்களையும் கைவிட்டுப் பாதுகாப்புள்ள இடங்களுக்குச்சென்று குடியேறினர். ஆங்கிலேயர்காலத்திலும் இவ்வாறேபலர் தங்கிராமங்களைக் கைவிட்டுச்சென்றனர்.

### இடப் பெயர்கள்

வன்னிநாட்டில் வாழ்ந்ததமிழர்கள் தாமவாழ்ந்த இடங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே இட்டுவழங்கினர். ஒரு நாட்டின்வளத்துக்குக் குளம் இன்றியமையாததென்பது யாவரும் நன்கறிந்தவிஷயம். குளமின்றேல் கிராமமில்லையென்றே சொல்லிவிடலாம். எனவே, ஒவ்வொருகிராமமும் அதன் கண்ணுள்ள குளத்தின் பெயரால் அழைக்கப்படலாயிற்று. மேலும் கிராமங்களுக்கு இடப்பட்டபெயர்கள் பெரும்பாலும்குளம்அல்லதுகேணியென்பதன் பரியாயப்பெயர்களை மிகுதியாகக் கொண்டனவாகக் காணப்படும். குளம் என்றசொல்லுக்குப் பரியாயப்பெயர்களாக மடு, மோட்டை, கேணி, சீரவி, ஓடை, குழி, தாழ்வு, வில்லு உபயோகிக்கப் பட்டுள்ளன. இவற்றுள் குளமென்பதை இறுதியாகக்கொண்டு முடியும்பெயர்களே அதிகமுண்டு. "555 இடப்பெயர்களை யான்ஆராய்ந்த போது, 332 மடுப்பெயர்களாகவும், 3 ஓடைப்பெயர்களாகவும், 3 'வில்' லுப் பெயர்களாகவும், 1 தாழ்வுப்பெயராகவும் இருப்பதை அவதானித்தேன்" என்று "வன்னிநாட்டு இடப்பெயர்வரலாறு" என்னும் ஆங்கிலகட்டுரையில் திரு. ஜே. பி. லூயி கூறியுள்ளார்.

### நாட்டுப் பாடல்கள்

வன்னிநாடு இலங்கையில் தானியக் களஞ்சியமாக விளங்கியது. வேளாண்மையே வன்னியர்களின் பிரதான தொழில். எனவே, வேளாண்மை சம்பந்தமான அநேகபள்ளுப்பாடல்கள் வன்னிப்பகுதியில் உண்டு. நாற்றுநடுதல், காவல்செய்தல், அரிவிவெட்டுதல், உப்பட்டிசேர்த்தல், சூடுஅடுக்குதல், சூடுமிதித்தல் முதலியதொழில்களைச் செய்யுமபொழுது அவற்றினுல்ஏற்படும் களைப்பினை உணராதிருத்தற்பொருட்டுப் பல நாட்டுப்பாடல்களைக் கமக்காரரும், தொழிலாளரும் பாடுவார்கள். நெற்கதிர்கள் நன்றுகமுற்றிவிட்டால், அவ்விளைவில் பங்குபற்ற வனவிலங்குகள் வந்துசேரும். அவைகள் பயிர்களுக்கு அழிவுசெய்யாதபடி, காவல் காக்கவேண்டும். அக்காலத்தில் வன்னிப்பகுதியில் கூட்டி நாடகங்களை நடித்துப் பொழுதுபோக்குவது வழக்கம். அவற்றுள்ஒன்று, பணறிப்பள்ளு. மற்றது சாலிப்பள்ளு. நெற்பயிர்களுக்குச் சேதம்விளைக்கும் விலங்குகளுள் பன்றிக்கூட்டம் முதலிடம் பெறுகின்றதெனலாம். பன்றிக்கூட்டம் ஓடிவரும் காட்சியைப் பாருங்கள். தலையாரிப் பன்றி முதலிலேவருகிறது. பிள்ளைகள் பின்னேதொடர்ந்து வருகின்றன.

குட்டியும் தாய்களுமாகக் குறங்
  கொள்ளிபோல் கால்களும் நோக
ஒட்டி மறைந்துநின் றேதான்
  உல்லாசப் பன்றியும் ஓடிவந்ததுவே

மனிதர்களின் மனதையே வசீகரிக்கும்முறையில் புளுகு ஒன்றை அவிழ்த்துவிடுகின்றது பன்றி:

புனத்தி லடரும் கரிகண் டுடனே
  புள்ளி மான்பல சாதிக்கும்
பிரித்துக் கொடுத்துத் தனக்குமிஞ்சிய
  பொருள்கொண் டேகும்மனிதரே.

என்று மானிடரைவிளித்துக் கேட்கின்றதுபன்றி.

நாட்டுப்பாடல்களைச் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்ட மட்டக்களப்பு வித்தியாதிகாரி திரு. அ. வி. மயில்வாகனம்அவர்கள் சேகரித்தபாடல்களுள்ஒன்றில், வன்னிக்கிராமங்களின் பெயர்கள் அடுக்கப்பட்டிருக்கும் விந்தையைப்பாருங்கள்:

அருவி சேர்பனங் காமம் துணுக்காய்
  அவனி யோர்புகழ் ஆலங்குளம்
பெருகுகோட்டைக்குளம்பன்மணற்குளம்
  பேசுஞ் சீர்த்தி உயிலங் குளம்
உருகும் மாந்தர்க் குதவும் முறிகண்டி
  ஒற்றைக் கொம்பன் இருக்குந் தலமாம்.

வன்னிப்பகுதியிலுள்ள நாட்டுப் பாடல்களைச் சேகரித்து ஒருசிறுநூலாக முதன்முதல் வெளியிட்ட பெருமை முள்ளியவளைவாசர் திரு. சி. ச. ஆரியகுட்டிப்பிள்ளை அவர்களுக்கே உரியதாகும். இந்நூல் இப்பொழுது கிடைப்பதுஅரிது. அரும்பெறற் பொக்கிஷமாகிய நாட்டுப்பாடல்கள் யாவற்றையும்சேகரித்து ஒருதனி நூலாக வெளியிடல், வன்னிநாட்டிலுள்ள சனசமூகநிலையங்களின் கடனாகும்எனக் குறிப்பிடவிரும்புகின்றேன். என்நண்பர் வெள்ளவத்தை திரு. மு. இராமலிங்கம்அவர்களும் இத்துறையில் முயன்றுவருகின்றார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடவிரும்புகின்றேன். காலஞ்சென்ற முதலியார் இராசநாயகம் அவர்களும் அநேக நாட்டுப்பாடல்களைச் சேகரித்து வைத்திருந்தார்கள். அவைகள் இப்பொழுது என்னிடம்இருக்கின்றன.

### புராதன கோயில்கள்

வன்னிநாட்டில் அநேகபுராதன இந்துகோயில்களும், பௌத்தவிகாரைகளும் இருந்தன என்பதற்கு அவற்றின் அழிபாடுகள் சான்றுபகரும். குராமபுரம், ஒட்டுசுட்டான், ஓமந்தை, புதூர், வற்றாப்பளை முதலியஇடங்களில் இந்துக்கோயில்கள இருந்தன.

### மறுமலர்ச்சி

இலங்கை சுதந்திரமடைந்தபின்னர் வன்னிநாட்டில் குடியேற்றதிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காடுகள் மூடிக்கிடந்தகாணிகள் மறுபடியும் செந்நெல்விளையும் கழனிகளாக மாறுகின்றன. இலங்கைஅரசாங்கத்தின் வைத்தியப்பகுதிசெய்த பேருதவியால் மலேரியாக்காய்ச்சல்ஓடிமறைகின்றது. தூர்ந்துகிடந்த குளங்களில் நீர் நிறைந்து நிற்கின்றது.

ஆங்காங்கே கிராமாபிவிர்த்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள்தோன்றிப் பொதுமக்கள் நலஅபிவிருத்திக்காகப் பலதொண்டுகளைச் செய்துவருகின்றன. இத்தகையநிலையங்களுக்கு மக்கள் போதியஆதர வளிக்கவேண்டும். இந்நிலையங்கள் [illegible]

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

சம்பத்திரிசியார் கல்லூரியிலே

# திருப்பாடுகளின் காட்சி

நமது கல்லூரி மாணவர்கள் திருப்பாடுகளின் காட்சியை நடித்துக்காண்பிக்கத் திரும்பவும் முன்வந்துள்ளார்கள். கல்லூரிமைதானத்திலே அடுத்தசித்திரை 2-ந் திகதி சனிக்கிழமையும், 3-ந் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காட்சி நடந்தேறும்.

2-ந் திகதியாகிய சனிக்கிழமைக்காட்சி பாடசாலைச் சிறுர்களுக்கும், மாணவர்-மாணவிகட்கும் மாத்திரமே காண்பிக்கப்படும். பொதுசனங்கள் மறுநாள் ஞாயிற்றுக்கிழமைக் காட்சிக்கு அழைக்கப்படுகின்றூர்கள்.

கத்தோலிக்க மக்களுடைய விசுவாசத்தின் பிரதானஅம்சம், ஓர்சாதாரண கொண்டாட்டம்அன்று. இந்நடிப்பு ஓர் திருச்சடங்கு அல்லாவிடினும், பயபக்தியுடன் கௌரவிக்கப்படவேண்டியதாகும். இரைச்சல், ஆரவாரம்செய்தல் முதலிய செயல்களைத்தடுக்க உங்கள்ஒத்துழைப்பு அவசியம்வேண்டும்.

எவ்விதம் முயற்சித்தாலும் கல்லூரிமைதானத்தில் சமுகமளிக்கும் ஆயிரமாயிரம் சனங்களுக்கு இருப்பிடம்அளிகக இயலாதிருப்பதையிட்டு வருந்துகிறோம். ஆகையால், நீங்கள் இங்குவரும்போது கம்பளம, பாய்முதலியன கொண்டுவருதல் நன்று. இலேசாகத் தூக்கிச்செலலக்கூடிய கதிரைகள் கொணடுவருவார்க்கும் விசேடஇடவசதி செய்யப்படும்.

ஆண்களுக்கும், பெண்களுக்கும், பாடசாலைச் சிறுவர்களுக்கும் தனித்தனியே இடவசதிகள் வகுக்கப்பட்டிருப்பினும் சிறுகுழந்தைகள் பெற்றோருடன் இருக்கலாம். கலாசாலைகளிலிருந்து பிள்ளைகள் கோஷ்டிகோஷ்டியாக வரும்போது ஆசிரியர்கள்சிலர் அவர்களுடன் வருதல்நன்று. திருப்பாடுகளின் காட்சி ஆங்கிலத்திலே நடிக்கப்படும்.

காட்சி இரண்டரைமணிநேரம் நீடித்திருக்குமாதலின், அதுமுழுவதும் முடிவடைய ஒன்பதரைமணியாகும்.

மைதானத்துள் பிரவேசிக்கச் சாயந்தரம் ஆறுமணி தொடக்கம் அனுமதியளிக்கப்படும். சேமக்காலைக்கு அண்மையிலுள்ள வாயில் வழியாகத்தான் உள்ளே வரவேண்டும். காட்சியைக் காண்பதற்கு எவ்விதமான கட்டணமும் இல்லை. சாயந்தரம் ஆறேமுக்கால்மணிக்கு யாவரும் தத்தம் இடங்களிலே அமர்ந்துகொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| சனிக்கிழமை — | மோட்டர்வண்டிகளும், பஸ்வண்டிகளும் கல்லூரி வாயிலில் பிள்ளைகளை இறக்கிவிட்டு "றெக்ளமேஷன்" வெளியில்போய்த் தங்கவேண்டும். |
| ஞாயிற்றுக்கிழமை — | எவ்விதவாகனங்களும் புளியடிச்சந்தியைத் தாண்டிவர அனுமதிக்கப்படமாட்டா. மோட்டர்வண்டிகள் ஆசனக்கோவில் மைதானத்தில் தங்கலாம். |

ச. நீ. அருள்நேசன், O. M. I.
(அதிபர்)
சம்பத்திரிசியார் கல்லூரி.

# போராபத்துக் கேதுவான போர்மோசா துவீபம்

அகில உலகமும் இன்று போர்மோசாதீவையே உற்றுக்கவனித்து வருகிறது. 1949-ம் ஆணடு கம்யூனிஸ்தர்கள் சீனதேசத்தைக் கைப்பற்றிக் கொண்டதிலிருந்து போர்மோசாதீவ சீனத்தேசியவாதிகளின் ஆதிக்கத்திலே இருந்துவருகிறது. இத்தீவுவிஷயமாக நவசீனவுக்கும், தேசியசீனவுக்குமிடையே ஏற்பட்டிருக்கும் கருத்துவேற்றுமையைத் தொடர்ந்து தூரகிழக்கில் பெரியதோர்நெருக்கடி தலையெடுத்துள்ளது. இந்தநெருக்கடி மூன்றூவது உலகயுத்தமாக வெடித்துவிடுமோஎன்றும் உலகநாடுகள் அஞ்சிக்கொண்டிருக்கின்றன.

மாஷல் சியாங் கே ஷெக்அவர்கள் தலைமையிலே இன்றும் போர்மோசா ஆளப்பட்டுவருகிறது. சீனதேசத்தைக் கம்யூனிஸ்தர்கள் கைப்பற்றிக் கொண்டபின மாஷல்சியாங் கே ஷெக் அவர்கள் சுமார் பத்துலட்சம் சீன அகதிகளுடன் போர்மோசா தீவிற் போய்க் குடியேறியது இங்குகுறிப்பிடத்தக்கது. இத்தீவின்நீளம் சுமார் 240 மைல். அகலம் சுமார் 85 மைல். இதுகிட்டத்தட்ட ஒல்லாந்தின் விஸ்தீரணத்தை ஒத்திருக்கும்.

போர்மோசா ஒருஅழகியதீவு. வனவளம் மிக்கது. ஆகாயத்தை முத்தமிட்டுக்கொண்டிருக்கும் மலைமுகடுகள் அங்குநிறையஉண்டு. மலைமுகட்டில் [illegible] இளந்தென்றல் மக்களை [illegible] வரையாதுஅளிக்கும் வள்ளலைப்போல் குளுமையூட்டிக் கொண்டிருக்கும். எங்குநோக்கினும் கண்ணுக்கெட்டியதூரம்வரை மரகதக்கம்பளம் விரித்துவைக்கப் பட்டதைப் போன்றபசுமையானகாட்சி. பன்னிறப்பறவைகள் இன்னிசைபாடி மக்களைப்பரவசப்படுத்தும். கோலமயில்கள்ஆடும். குயில்கள் மறைந்திருந்து கூவும். இது கடல்மட்டத்திலிருந்து சுமார் 3,000 அடிஉயரத்தில் இருக்கின்றது. இதன்பள்ளத்தாக்கு நீர்வளமும், நிலவளமும்பெற்றுத் திகழ்கின்றது. உணவுதானியங்கள் இங்கு கொள்ளைகொள்ளையாக விளைகின்றன.

சுமார் 400 ஆண்டுகளுக்குமுன் போர்த்துக்கேயர்கள் போர்மோசாவுக்குச்சென்றூர்கள். இந்தத்தீவின் அழகு அவர்களின்உள்ளத்தைக் கொள்ளைகொணடுவிட்டது. அதனுல் இவ்வழகியதீவுக்கு அவர்கள் எழிலாசிஎன்று நாமகரணம்சூட்டினூர்கள். உலகத்திலேயே மிகச்சிறந்தகூடம் இங்குதான் தயாரிக்கப்படுகிறது. புகையிலை, உப்பு, நிலக்கரி முதலியபொருட்கள் இங்கு ஏராளமாகக் கிடைக்கின்றன. தங்கமும் இங்குகிடைக்கிறது. சீனிஏராளமாக உற்பத்திசெய்யப்படுகிறது.

போர்த்துக்கேயருக்குப்பின் ஸ்பானியர்களும், டச்சுக்காரரும் இந்தத் தீவுக்குச்சென்றூர்கள். அதன் நிலவளத்தைக்கண்டு அவர்கள் பிரமித்துவிட்டார்கள். டச்சுக்காரர் 1624-ம்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### பாஸ்குத்திருநாள் ஆசீர்வாதம்

பரிசுத்தவாரத்துக்கும், பாஸ்குத்திருநாளுக்குமாக ரோமாபுரிக்குப் போகவிருக்கின்ற அநேகாயிரக்கணக்கான மக்கள் பாஸ்குத் திருநாளன்று காலை பரிசுத்தபாப்பரசர் சம்பேதுருவானவர்மகாலய மேல்மாடியில் நின்றுகொண்டு ரோமைநகருக்கும், உலகத்துக்கும் தமது ஆசீர்வாதம் அருளுவதைக் கண்டுகொள்வார்கள். இதுநிகழ்ந்து ஏழுதினங்களின் பின் சீனாவிலே பொக்ஸருடைய கலகத்தின்போது கொலைசெய்யப்பட்ட 56 வேதசாட்சிகளினதும் திருப்பண்டங்களை வணங்கிப் பத்திசெய்வதற்காக அவர் திருமபவும் சம்பேதுருவானவர் ஆலயஞ்செல்வார். அன்றுகாலை அவர்கள். முத்திப்பேறுபெற்ற பட்டம் சூட்டப்படுவார்கள். தமதுமகுட தாரண 16-ம் ஆண்டு விழா ஞாபகார்த்தமாக இம மாதம் 12-ந்திகதியன்று நடைபெற்ற வைபவங்களிலெல்லாம் பரிசுத்தபாப்பரசர் பூரணமாகக் கலந்துகொள்ளலாயினர். அன்றுகாலைஅவர் தமது அறையிலிருந்து கால்நடையாக வத்திக்கான்மாளிகையின் முதற்தளத்துக்குச்சென்று திருவஸ்திரங்கள் முழுவதுமஅணிந்து, மும்மடிக்கிரீடம்புனைந்ததும் "ஜெஸ்தாத்தோறியல்" எனப்படும் ஆசனத்தில் வைத்துச் சிஸ்ரைன்சிற்றாலயத்திற்கு ஊர்வலமாகக் கொண்டுசெல்லப்பெற்றார். அங்குநிகழ்ந்த திருவைபவங்களுக்கு அவர் சமுகமளித்தமை கடந்தமூன்றுவருடங்களிலும் இதுவே முதன்முறையாகும்.

### குஷ்டரோகரின் அப்போஸ்தலர்

"குஷ்டரோகரின் அப்போஸ்தல" ரெனப் பிரபல்யமாக அறியப்படுகிறவரான வண. தமியான்சுவாமியாருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டும்விஷயமாய் நடைபெறவேண்டிய அப்போஸ்தலிக்க ஆரம்பவிசாரணையை ரோமாபுரியிலே திருச்சடங்காசார திருச்சங்கம் தொடக்கியிருக்கிறது. இந்த விசாரணையிலே முந்தஅவரது வீரத்துவ புண்ணியங்களும், பிந்தஅவர்சலுகையால் நடைபெற்றதாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதுமைகளும் ஆராயப்படும். தமியான்சுவாமியாரின் திருவுடல் 1936-ம் ஆண்டுமொலக்காய்தீவிலிருந்து வெற்றிப்பிரவேசமாகத் திரும்பவும் ஐரோப்பாவுக்குக் கொண்டுசென்று பெல்ஜியதேச லூவெயின்நகரிலே அவர்சேர்ந்திருந்த யேசுவினுடையவும், மரியாயினுடையவும் திருஇருதயங்களின் குருமார்சபைமடத்திலே பூச்சியமாகச் சேமித்துவைக்கப் பட்டிருக்கிறது. சுவாமியார்பெல்ஜியத்திலே 1840-ம் ஆண்டு பிறந்தார். குஷ்டரோகராய் 1889-ம் ஆண்டு குருத்துஞாயிறன்று மரணமடைந்தார். தமதுகேள்வியின் பேரிலே 1864-ம் ஆண்டு ஹவாயன் தீவுகளுக்குஅனுப்பப்பட்டு, அங்குதிருத்தொண்டாற்றிவந்த இவர் பிந்த1873-ம் ஆண்டு தம்முடைய கேள்வியின்பேரிலேயே அத்தீவுகளில் ஒன்றாகிய மொலக்காய்தீவுக்கு அனுப்பி வைக்கப்பெற்றார். ஹவாயன் தீவுகளிலுள்ள குஷ்டரோகர்களெல்லாம் இத்தீவிலே குடியேறிச் சீவியகாலமுழுவதுமே தனிக்கவிடப்பட்டுப் பெரிதுந் தவித்துக்கொண்டிருந்தார்கள். தமியான்சுவாமியார் அவர்களுக்கு ஊழியஞ்செய்தும், அவர்களைப்பராமரித்தும், அவர்களுடையஉணவையே தாமும் புசித்தும் கடைசியாக ஓர்குஷ்டரோகராகி அதற்கேதாமும் பலியாகினர்.

### இருபுதிய சிறைமுகாங்கள்

கம்யூனிஸ்தநாடாகிய செக்கோசிலவாகியாவிலே திருச்சபைக்கு மாறாகத் தொடக்கப்பட்டிருக்கும் புதியதோர் இயக்கத்தில் பெருந்தொகையாகக் கைதுசெய்யப்படவிருக்கும் குருமாரையும், சாதாரணகத்தோலிக்கரையும் சிறைவைப்பதற்கென அங்கு கிரேமெறிஸ், ஹொடோளின் எனும் இடங்களிலே இரு புதியசிறைமுகாங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன பொஹிமியா, மொறாவியா எனும் இருமாகாணங்களிலுமுள்ள பட்டணங்களைச் சூழவாவுள்ள குருமனைகளும், கத்தோலிக்கபிரமுகர்களின் இல்லங்களும் இரவிலே பரிசோதனை செய்யப்படுகின்றன. முதலாளித்துவத்தைத் திரும்பவுங்கொண்டுவர முயற்சிக்கின்றார்களெனக் குருமார் மீது குற்றஞ்சாட்டப்படுகிறது. இதன்பேரில் செவிலியாளனுமிடத்திலுள்ள சிறைமுகாமில் மாத்திரம் தற்போது 185 குருமார் காவலில்வைக்கப்பட்டிருக்கின்றனர். சிறைமுகாங்களைக் காவல்செய்வதற்கென்று கம்யூனிஸ்த யுவர்கள்இயககத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியிலிருந்தே காவலர்கள் தெரிவுசெய்யப்படுகின்றார்கள்.

### நாள்ஒன்றுக்கு 1,000 டலர்

அமெரிக்க கோடீசுரர்ஒருவரின் புதல்வியாய் இருந்தும், நாளொன்றுக்கு ஆயிரம்டலர் — அதாவது 5,000 ரூபா வருமானம் வந்துகொண்டிருந்தும கடந்தஅறுபது வருடங்களாகத் தரித்திரவாழ்க்கை நடத்திச் சமீபத்திலே பிலடெல்பியாநகரில் தனது 96-ம் வயதில் காலஞ்சென்றாள், ஓர் பெரும் தருமசீமாட்டி. இவள்தான் சங். கத்தரீன் டிறெக்செல் கன்னியாஸ்திரியம்மாள். அந்நகரில்வாழ்ந்த மகாசெல்வவந்தருள் ஒருவரான திரு. பிரான்சீஸ் டிறெக்செல் அவர்களின் புதல்வியான இவள் இந்தியருக்கும், வெள்ளைக்காரர் அல்லாதவர்களுக்குமாகத் திவ்வியசற்பிரசாத கன்னியாஸ்திரிமார்சபையை அடியிட்டு, அதன் முதலாவது சிரேஷ்டதாயாராக இருந்துவந்தாள். 1885-ம் ஆண்டு இவள் தந்தையார் காலஞ்சென்றபோது 13 கோடியே 50 லட்சரூபா பெறுமதியுடைய தாய் அவர்விட்டுப்போன நம்பிக்கைநிதியிலிருந்து இவளுக்கு வருமானம் வரத்தொடங்கியது. அந்நகர் அதிமேற்றிராணியாராயிருந்த கருதினல்டௌகேட்ரி ஆண்டவர் 1936-ம் ஆண்டுகுறிப்பிட்டபோது, அதுவரை சங். கத்தரீன்தாயார் தனதுசொந்த ஸ்தாபனங்களை மாத்திரமல்ல, அமெரிக்க ஐக்கியதேசத்திலுள்ள பன்னிரு நாடுகளிலும், ஐந்துபிறதேசங்களிலுமுள்ள மற்றும் 21 ஸ்தாபனங்களையும் தாபரிப்பதற்கென்று 5கோடியே 70 லட்சம் ரூபா உதவியிருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார். கத்தரீன் தாயாரைப்போலவே அவளுடைய இருசகோதரிகளும தங்கள்சொத்துக்களின் வருமானங்களைத் தருமத்திலே செலவிட்டு வந்தார்கள்.

### சுவாமியார் யாது கூறுகின்றார் ?

இம்மாதம் 3-ந் திகதியன்று மஸ்கோநகரிலிருந்து சோவியற் அரசாங்கத்தால் வெளியேற்றப்பட்ட அமெரிக்க குரவரான வண. ஜோர்ஜெஸ் பிஸோனெற்றிசுவாமியார் ரூஷியபாஷையை வாசாலமாகப் பேசக்கூடியவர். சோவியற்ரூஷியாவிலே சுதந்திரமாகப் பிரயாணஞ் செய்யக்கூடியவராயிருந்தவர். ரூஷியமக்களிடையே இருவருடகாலம் சஞ்சரித்திருந்த சுவாமியார் தமது அனுபவத்தைக்கொண்டு யாது கூறுகின்றார்? ரூஷிய தலைவர்கள் எவ்வளவு கடுமையாகத் தான் முயன்றபோதிலும் கடவுளைக்கொண்டிராத ஓர்சனசாகியத்தை அவர்கள் விருத்திசெய்து கொள்ளவே மாட்டார்களெனக் கூறுகின்றார். "ரூஷியாவிலுள்ள சாதாரணமக்கள் சமயத்தின்மட்டிற் கொண்டுள்ள ஆழ்ந்தமதிப்பைச் சோவியற் அதிகாரிகள் விடாதுநடத்திய பிரசாரம் தளர்த்திவிடவில்லை; அவர்கள் ரூஷிய பிரிவினைச் சபையையும், யூதசமூகத்தையும், முஸ்லீம்மதத்தையும பிரசார வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்; நீகாநகரிலே ஸ்பிறிங்கோவிச் அதிமேற்றிராணியாரைத் தலைமையாகக்கொண்ட ரூஷியகத்தோலிக்க திருச்சபை இன்னுமே அவர்களுடன் ஒத்துப்போகவில்லை; சோவியற்அதிகாரிகளின் தூண்டுதலாலே ரூஷியாவின் வெளிநாட்டுக்கொள்கையை ஆதரிக்குமாறுகேட்டுஅங்கு கத்தோலிக்கதிருச்சபை நீங்கலாக மற்றெல்லாச்சபைகளாலும் பிறநாடுகளிலுள்ள கிறீஸ்தவர்களுக்கு வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன" என்றும் சுவாமியார் தெரிவித்திருக்கின்றார்.

### இந்தியகாங்கிரஸ் தலைவர்

இந்தியாவின் முதன்மைவாய்ந்த அரசியர்கட்சியான இந்தியதேசிய காங்கிரஸ்கட்சியின் புதியதலைவராகச் சமீபத்திலே தெரியப்பெற்றிருப்பவரான திரு. யு. என். தேபர்அவர்கள் புதுடில்லியிலுள்ள சென் சேவியர் கல்லூரியிலே யேசுசபைக்குருமாரிடம் கல்விபயின்றவராவர். வேலைநெருக்கங் காரணமாக அக்கட்சியின் தலைமைப்பதவியைச் சமீபத்திலே இராசிநாமாச்செய்தருளிய பிரதமர் ஜவஹர்லால்நேரு அவர்களிடமாகவே இப்புதியபதவிக்கு இவர்தெரியப்படலாயினர். சட்டசாஸ்திரம் கற்பதற்காக இவர் பட்டதாரியாகுமுன்னரே சென் சேவியர்கல்லூரியே விட்டுவிலகினார்.

### மகாஉந்நத ஞாபகசின்னம்

போர்த்துக்காலின் தலைப்பட்டணமாகிய லிஸ்பன் நகருக்குச் சமீபமாய்க்கிறீஸ்துஇராசாவின் பேரால் 360 அடிஉயரமான ஞாபகசின்னம்ஒன்று நிறுவப்படவிருக்கிறது. 268 அடிஉயரமான ஆதாரபீடத்தின் உச்சியிலே அமைக்கப்படும் கிறீஸ்து இராசாவின் திருச்சுரூபம் 92 அடிஉயரமுள்ளதாய் இருக்கும். ஆதாரபீடத்தின் அடிப்பாகம் ஓர்சிற்றாலயத்தை அடக்கியிருக்கும். இந்தஞாபகசின்னத்தை அமைக்கச்சுமார் 26,000 கனயார் கங்கிறீற்தேவைப்படுமெனமதிப்பிடப்படுகிறது. 1960-ம் ஆண்டுதான் இதனை அமைக்கும் வேலை பூர்த்தியடையும். அப்போது இதுதான் கிறீஸ்துநாதர்பேராலுள்ள உலகின்மகா உந்நதமான ஞாபகசின்னமாகத் திகழும்.

### சிங்கப்பூர்ச் செபமாலை மகாநாடு

குடும்பசெபமாலைப் படையணி இயக்கத்தின் பிரஸ்தாபம் பெற்ற தலைவரான வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமியார் கொழும்பைத்தொடர்ந்து சிங்கப்பூரிலே தமது குடும்பசெபமாலைப் படையணிமகாநாட்டை நடத்தலாயினர். "சிங்கப்பூரின் சரித்திரத்திலே முன்னொருபோதும் இதைப்போலும் மாபெரும் கத்தோலிக்கசனத்திரள் கூடியதில்லை" யென்று அங்கு செபமாலைமகாநாட்டை ஒழுங்குபண்ணிய கம்மிற்றியின் தலைவரான திரு. பிராங் ஜேம்ஸ்அவர்கள் கூறலாயினர். ஜாலன் பிசார் ஸ்ரேடியத்திலே சுமார் 27,000 மக்கள் கூடியசமூகத்தில் இந்தமகாநாடு நடந்தேறியது. அவ்வேளை பேச்சாளர்களின் சிரங்களுக்குமேலாக அமைக்கப்பட்டிருந்த உயர்மேடைஒன்றிலே தேவதாயாரின் திருச்சுரூபம் அலங்கிர்தகாட்சி அளித்துக்கொண்டிருந்தது. சிங்கப்பூர் அதிமேற்றிராணியார் அவ்வேளைபேசியபோது: இன்றைய குடும்பங்களை அழித்துவிடுமாறு துட்டசக்திகளைத் துணைக்கொண்டு சத்துராதிகள் செய்துகொண்டுவரும் சதிமானவேலைகளால் ஏற்படும்அபாயத்தைப் பற்றி எடுத்துக்கூறி வண. பெய்ற்றன்சுவாமிகளை அனைவருக்கும் அறிமுகஞ்செய்துவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்குனிமாதம்

**பொதுக்கருத்து:** பரிசுத்தபாப்பரசரின் கருத்துகளுக்காக வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** பாகிஸ்தானில் திருச்சபைக்காக மன்றாடிக் கொள்வது.


சத்தியவேத
# பாதுகாவலன்

1955-ம் ஆண்டு
பங்குனி மாதம் 31-ந் திகதி





தேவகிருபையினாலும்
பரிசுத்த ஸ்தானத்தின் தயவினாலும்
யாழ்ப்பாண மேற்றிராணியாராகிய
ஜெறோம் எமிலியானுஸ்பிள்ளை
ஆகிய நாம்
நமது மேற்றிராசனத்தைச்சேர்ந்த
சகல குருமாருக்கும், விசுவாசிகளுக்கும்
சுபமும்,
கர்த்தரில் ஆசீர்வாதமும் கூறி

## விடுக்கும் நிருபம்

யேசுக்கிறீஸ்துநாதரில் நமக்குமிகவும் அருமையான சகோதரரே!

அண்மையில் நாம பரிசுத்த பிதாவைச் சந்தித்துவிட்டு, ஐரோப்பிய, அமெரிக்கநாடுகளில் செய்தசுற்றுப்பிரயாணத்திலிருந்து, நமது மேற்றிராசனத்தைச்சேர்ந்த பிள்ளைகளின் ஞான வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதே ஞானமேய்ப்பராகிய நம்முடைய முதற் கடமையெனக் கூடுதலாக உணருகிறோம். இதற்குதவியாக நமது கத்தோலிக்க குடும்பங்களும், பாடசாலைகளும், குருமாரும் செய்யவேண்டிய சேவைகளை இங்குகுறிப்பிடுகின்றோம்.

### சமயவளர்ச்சியின் கருத்து :

நற்காலக் கல்வியின்இலட்சியம் மனிதவளர்ச்சியின் எல்லாவிதமான நோக்கங்களையும் பரிபாலித்து வளர்ப்பதாகும். இன்று மனிதனில விவேக வளர்ச்சியைக் காணலாம். அவனுக்குச் சரீரவளர்ச்சிக்குரிய போஷணை அளிக்கப்படுகிறது. சமூகஉணர்ச்சி இக்கால சமுதாய முற்போக்கினால் விர்த்தியடைகிறது. அழகுக்கலையுணர்ச்சி விழிப்படைகிறது. இவைகள்தவிர, மனிதனுடையவளர்ச்சியில் அதிமுக்கியஇடம் பெறவேண்டிய இன்னொன்றுமுண்டு. அதுவே சமயவளர்ச்சியும், சன்மார்க்க தேர்ச்சியுமாகும். சமயஅறிவே மனிதன்சீவிப்பதன் உண்மையான நோக்கத்தையும், அவனை உண்டாக்கியவர் மட்டில் அவனுக்குள்ள கடமையை அறிந்துகொள்வதற்குவேண்டிய ஞான வெளிச்சத்தையும் கொடுப்பது. ஆகவே, சமயவளர்ச்சி மனிதனுடைய பூரணவளர்ச்சிக்கு வழிகாட்டியாகின்றது. கிறீஸ்துவகல்வியின் இலட்சியம், எங்கள்ஒவ்வொருவரையும் ஒவ்வொரு கிறீஸ்துவாக்குவதே. அல்லது 11-ம் பத்திநாதர் கிறீஸ்துவகல்வியைப்பற்றி விடுத்த சாதாரண நிருபத்தில் கூறியுள்ளபடி, கிறீஸ்துவகல்வியின் நேரான பேறு, "தேவ வரப்பிரசாதத்தோடு ஒத்துழைத்து உண்மையும், உறுதியுமுள்ள கிறீஸ்தவனாகவேண்டும்" என்பதே. ஞானஸ்நானத்தினால் தூய்மையாக்கப்பட்டநாம் கிறீஸ்துவின்மயமாக மாறவேண்டும். இதேகாரணத்தினால் தான் கிறீஸ்துவகல்வி மனிதனுடைய முழுச்சீவியத்திலும் செறிந்து அதைத் தாங்கிநிற்கவேண்டியது. ஆத்துமம், சரீரம், புத்தி, ஒழுக்கம், இல்லறம், சமுதாயம் ஆகியவற்றிலேசுவறிக் கிறீஸ்துநாதரின் போதனைகளுக்கும், சாதனைகளுக்கும்ஏற்க அவற்றைச்சீர்ப்படுத்தி உந்நதநிலையடையச் செய்தல்வேண்டும். இக்காரணங்களால் கிறீஸ்துவ கல்வியானது வேண்டியயாவையும் தன்னிலேஅடக்கியுள்ள ஓர்சம்பூரணமான கல்வியேயாகும்.

### சமயபோதனையும் பயிற்சியும் :

ஒருபிள்ளை பெறுகின்றசமயபோதனையும், சமயப்பயிற்சியும் அவனுடைய சமயஅறிவையும், மற்றும்அறிவுகளையும் வளர்க்கின்றன. அப்பிள்ளை வேத உண்மைகளையும், வேதஒழுங்குகளையும் அறிந்துகொள்வதுமாத்திரம்போதாது. அவைகளைத் தனதுநாளாந்த சீவியத்தில் நடைமுறைக்குக்கொண்டுவந்து, அதனால் ஞான அறிவில்வளரவும், ஞான சீவியத்தில் ஒளிரவும் அவைகள்உதவியாகவேண்டும். ஞானஅறிவு ஞான அனுசாரமாக மாறவேண்டும். சுருங்கக்கூறின், ஞானஉபதேசக்கல்வி ஒரு பிள்ளையின் ஒழுக்கத்தைத் தூய்மையாக்கி, அவனைக் கத்தோலிக்கஉலகத்திற்கு ஓர்எடுத்துக்காட்டாக அமைக்க வேண்டும்.

### வீட்டுக் கல்வி :

வீட்டுக்கல்வியே சன்மார்க்கவளர்ச்சிக்கு அத்திவாரமாகிறது. இந்தஉண்மையை அறிந்தே ஆதிஉரோமர்கள் போர்வீரர்களின் ஆரம்ப பயிற்சியைத் தாய்மாரிடம் ஒப்படைத்தார்கள். போருக்குச்சென்ற மூன்றுபிள்ளைகளின் தாயானவள் அவர்கள் இறந்தசெய்தியைக் கொணர்ந்ததூதனை விழித்து, "நீங்கள் வெற்றிபெற்றீர்களா? எனது பிள்ளைகள் புறங்காட்டாது போராடி இறந்தார்களா?" என்றுவினவினள். அந்தஉரோமைமாதின் மனப்பாங்கு இப்படிப்பட்டதாயின் அருமையானவர்களே! மோட்சஇராச்சியத்தைச் சுதந்தரித்துக் கொள்ளவேண்டிய தங்கள்பிள்ளைகளைப் பயிற்றும் கத்தோலிக்கபெற்றோரின் மனப்பான்மை எப்படிப்பட்டதாய் இருக்கவேண்டும்?

தகுதிவாய்ந்த வீட்டுப்பயிற்சி அர்ச்சியசிட்டர்களை உருவாக்க வல்லது. யேசுவின் சிறியபுஷ்பத்தின் பெற்றோர் இதற்கு உதாரணமானவர்கள். அர்ச்சியசிட்டர்களான அகுஸ்தீனார், பேக்மன்ஸ் அருளப்பர், பிரான்ஸ்தேச லூயிஸ்அரசர் என்பவர்கள் எப்படி அர்ச்சியசிட்டர்களானார்கள்? "மகனே! நீ ஒருசாவான பாவத்தைக் கட்டிக்கொள்வதிலும் நீ இறந்துவிடக் காண்பதுநன்று" என்று அர்ச். லூயிஸ் அரசரின்தாயார் அடிக்கடி தனதுமகனுக்குச்சொல்லுவார். அர்ச். அகுஸ்தீனாரைப்பற்றிக் கூறப்படுவதென்ன? அவர் எங்குசென்றாலும் அவருடைய தாயார் அவரைப்பின்சென்று, தனது நன்முன்மாதிரிகையாலும், விடாப்பிடியான செபத்தினாலும் அவரை அர்ச்சியசிட்ட ராக்கிவிட்டாரே.

ஆரம்பத்திலஓர்பிள்ளை பிறரைக்கண்டு பாவிப்பதால் — அதாவது கண்கண்டதைச் செய்வதினால் அறிவைப்பெறுகிறது. காலையிலும், மாலையிலும், விசேடமாகக் குடும்ப செபமாலை வேளையிலும் பெற்றோர் முழந்தாளிலிருந்து செபிப்பதைப் பிள்ளைபார்க்கிறது. போசனத்துக்குமுன்னும்பின்னும் பெற்றோருடன்சேர்ந்து செபிக்கிறது. திரிகாலமணி அடிக்கும்போது முழந்தாளிலிருந்து திரிகாலச்செபஞ் சொல்லுகிறது. பூசைக்கும், தேவநற்கருணைச் சந்திப்புக்கும பெற்றோருடன்கூடச் செல்லுகிறது. வயதுவந்ததும் தேவநற்கருணைவாங்க ஆயத்தப் படுத்தப் படுகிறது. யேசுநாதரையும், அவருடைய திருத்தாயாரையும் நேசிக்கும்படி பயிற்றப்படுகிறது. தான்செய்த குற்றங்களுக்காக மனஸ்தாபப்படவும், பிறநாடுகளைச்சேர்ந்த பிள்ளைகளின் இரட்சணியத்துக்காக உழைக்கவும், தன்னை ஒறுக்கவும், [illegible] கென்று கொடுபடும் பணத்தைமுதலாய்த் தர்மங்கொடுத்து ஒறுத்தல் முயற்சி செய்யவும் பயிற்றப்படுகிறது. இத்தகைய பயிற்சிகளுக்கு முன் மாதிரிகையாய் இருக்கவேண்டியவர்கள் பெற்றோரே!

### ஆரம்பபாடசாலைக் கல்வி

வீடுதான் வேதகல்வியின் ஆரம்ப தலமென்பதை அழுத்தமாக எடுத்துக்காட்டியுள்ளோம். வீட்டில் அடைந்துகொண்ட பயிற்சியைத் தொடர்ந்து உறுதியாக வளர்த்துக்கொண்டு வருவதே கத்தோலிக்க பாடசாலைகளின் முக்கியகடமையாகும். இத்துறையில் வீடானது சித்திபெற முடியாமல் போகுமிடத்து, பாடசாலைகளே அந்த ஸ்தானத்தை வகிப்பதுமன்றி, பிள்ளையுடைய வேதகல்வியின் வளர்ச்சிக்காக உழைத்து, அதை உந்நதநிலைக்குக் கொண்டுவரவும் வேண்டியன. பாடசாலை வேதகல்வியை ஊட்டும் இடம் மாத்திரமன்று. ஆனால்,வேதசீவியத்துக்குமே இடமுமாகும். நாள்தோறும் ஒருபாடநேரத்தில்மாத்திரம் ஞானஉபதேசம்படிப்பிப்பதில் வேதகல்வி அடங்குவதன்று. ஆனால், ஒவ்வொருநாளும் கற்றதைச் சீவியத்திலே பயிற்சிக்குக் கொண்டுவருவதிலும் அடங்குவதாகும். ஆசிரியர்தாமே நமதுஆண்டவரைப் பின்பற்றியவர்களைக் காண்பிக்கும் வெளிச்சமாயும், மற்றோர் கிறீஸ்துநாதராயும், நமதுஆண்டவரின் பரிசுத்தத்தையும், பற்றுதல்களையும்பிரகாசிப்பிக்கிறவராயும் இருக்கவேண்டியவர். ஆசிரியர் தமது சீவியமாதிரிகையாலே சர்வேசுரன் இருக்கிறாரென்பதைப் பிள்ளைகளுக்கு அடிக்கடி ஞாபகப்படுத்துகிறவராய் அமையவேண்டியவர். தாம் கையிடும் ஒவ்வோர்முயற்சியிலும் சர்வேசுரனைப் பிரியப்படுத்த அவர் எடுத்துக்கொள்ளும் அக்கறையானது, பிதாவின்சித்தத்தையே நிறைவேற்றத் தமதுசீவியம் முழுவதையுமே அர்ப்பணம்செய்த கிறீஸ்துநாதரையே மாணவர்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டும். ஆசிரியர் தினமும் பூசைக்குப்போவதும், சற்பிரசாதம் உட்கொள்வதும், கிழமைதவறாது பாவசங்கீர்த்தனம் செய்வதும், நாளாந்தம் திவ்வியநற்கருணை சந்திப்பதும், முதல் வெள்ளி, முதற்சனிப் பத்தியைஅனுசரிப்பதும், ஒவ்வொருநாளும் செபமாலைசொல்வதுமாகிய இவையெல்லாம் நமதுஇரட்சகரைப் பின்பற்றுதற்குப் பிள்ளைகளை ஊக்கப்படுத்துவனவாகும். ஆகவே, அன்பார்ந்த கத்தோலிக்க ஆசிரியர்களே! உங்கள் உந்நதமான அழைத்தலைச் சிந்தித்துப்பாருங்கள்! உங்கள் ஞானஒளியினால் பிள்ளைகளில் கிறீஸ்துநாதரைப் பிரகாசிக்கச்செய்து, அவரதுசாயலை அவர்களில் பதிப்பதே உங்களது முதல்முக்கிய கடமையாகும்.

ஆசிரியரின் இரண்டாவது முக்கிய கடமை, வேதத்தைப் படிப்பிப்பதாகும். "ஆசிரியரும் பிள்ளைகளும்," "படிப்பிக்கும்பொருள்முறையும்" என்ற சக்திவாய்ந்த இந்தஇரு சோடிப்பதங்களிலும் ஞானஉபதேச ஆசிரியரைப் பற்றிய முழுவியாக்கியானமும் அமைந்திருக்கிறது. அவர்கள் ஞானக்கல்வி நிறைந்தவர்களாகவும், ஒழுக்கத்தில் உயர்ந்தவர்களாகவும்இருக்கவேண்டும். பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் குருப்பிரசாதியாகிய டிறிங்வாட்டர் (Drink Water) அவர்கள் எழுதியதைவிடப் புதிதாகஒன்றும் எழுதப்படவில்லை. "கடவுள் அவர்களை உண்டாக்கினார். அவர்களை எதற்காகஉண்டாக்கினார்என்பதைஅறியப் பிரயாசப்பட்டால், அவர்கள் எப்படி நடத்தப்படவேண்டியவர்கள்என்று அவர் கருதுகிறார் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். அதன்படி பிள்ளைகளைநடத்தினால் கிறீஸ்துநாதருடையவும், பிள்ளைகளுடையவும் ஒத்துழைப்பை அதிகமாகப்பெறலாம்." ஞானஉபதேசத்தின் இலட்சியம் கிறீஸ்துநாதர்தான். ஞானஉபதேசம், சுவிசேஷம், திருச்சபைச்சரித்திரம், ஆராதனைவருடம், பரிசுத்தசங்கீதங்கள், செபங்கள், தேவதிரவியஅனுமானங்கள், திவ்வியபூசையாகிய இவைகளெல்லாம் ஒன்றுசேர்ந்தால் கிறீஸ்துநாதரையே போயடையச்செல்லும்.

### ஞானோபதேசம்கற்பிக்கக் கையாள வேண்டிய முறைஎன்ன ?

பிள்ளைகளின் வயது, திறமை, தகமை ஆகியவற்றைநோக்கியே படிப்பித்தல்முறைகள் தெரியப்படவேண்டும். ஆகவே, ஆசிரியர் படிப்பித்தலில் எல்லாவித உண்மைகளையும், விதிகளையும், இக்காலக்கல்விக்கொள்கை முறைகளையும், கருத்தாகக்கேட்க — பார்க்கக்கூடிய சாதனங்களையும், தாமே கையாளும் முறைகளையும் உபயோகித்துக் கற்றலிலும், கற்பித்தலிலும் கவர்ச்சியை உண்டாக்கிக் கொள்ளலாம். படிப்பிக்கப்பட்ட உண்மைகள் பிள்ளையின் மனதில் நிலையான இடத்தை வகிக்க வேண்டும். சமயகல்விக்கும், உலககல்விக்கும்இடையில் பாரதூரமான வித்தியாசமுண்டு என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். உலககல்வியில் பலதுறைகளுண்டு. எல்லாத்துறைகளும் எல்லோருக்கும் ஆகுவனவல்ல. ஆனால், சமயகல்வியோ அப்படியானதல்ல. ஞானஉபதேசத்தில் கற்றவைகளைச் சீவியமுறையிற் பயன்படுத்தவில்லையோ அது ஞானஉபதேசக் கல்வியல்ல. பூமிசாஸ்திரம், கணிதம், சரித்திரம், விஞ்ஞானம் ஆகியபாடங்களைக் கற்பிக்கும்போது நமது பிள்ளைகள் அவற்றில் தனித்தனி சிறப்பும், திறமையும் பெறுவதல்ல எமது நோக்கம். இலக்கியம், சித்திரம் போன்றவற்றில் அறிவைப்பெற்று அவைகளை இரசிக்கலாம். சுகாதாரம், குடியியல்போன்ற பாடங்களைக்கற்றுப் பின்னர் அவைகளைப் பிரயோசனப் படுத்துதலுங்கூடும். ஆனால், ஒவ்வொரு சமயபாடத்திலும் கற்றவைகளைப் பின்னர் சீவியநடபடியில் பிரயோகப் படுத்தவில்லையோ அந்தப்பாடம் சரிவரக் கற்கப்படவில்லை என்பதுதிண்ணம். ஆகவே, அது சமய பாடமாகாது. பாடங்கள் பிள்ளையின் நாளாந்த சீவியத்தில் சேர்க்கப்பட்டு, வாழ்க்கையிலே நடைமுறைக்கு வர வேண்டும். ஒருவேதசத்தியத்தை, அல்லது சன்மார்க்கநெறியை ஒருபிள்ளை கற்றபின் அப்பிள்ளை அதை அன்றும், பின்னரும் தனது சிலபல கிரிகைகளினால சாதித்து வாழ்க்கைமுறையில் கொண்டுவர உற்சாகமுடையவனாய் இருத்தல்வேண்டும்.

### உயர்தரபாடசாலைக் கல்வி

உயர்தரபாடசாலைகளின் பொறுப்பைக் கூடுதலாக அழுத்திக்கூற முடியாது. வாலவயதடையும பருவத்தில் தான் விவேகம், சரீரம், மெய்ப்பாடு, சமுதாயசீவியம் ஆகியவற்றில் மாற்றங்களும், வளர்ச்சிகளும் விரைவாக ஏற்படுகின்றன. சிந்தனாசக்தி திட்பநுட்பமாய் எதையும்ஆராய ஏவப்படுகிறது. ஆகவே, விசுவாசம்என்பது என்னவென்றும், அது எதற்கென்றும் அறிவதற்கு இயற்கையாவே அது தூண்டப்படுகிறது. அதைஅறிய வாலன் ஆசிக்கின்றான். பிதா, மாதா, குரு, உபாத்தி என்போரிடம் தான்முன்னர் கற்றதையெல்லாம் ஆராயும் விருப்பு அவன்மனதில் உதிக்கிறது. இச்சந்தர்ப்பத்தில்தான் அவனுக்கு விசுவாசத்தைப்பற்றியஅறிவு ஊட்டப்படவேண்டியது. ஞானஉபதேசத்தில் உயர்தர பாடசாலை ஏனையபாடங்களிலும் மேலான அறிவைக் கொடுக்கவேண்டும். வாலவயதடையும் பிள்ளைகளைப்பற்றி நாம்மீண்டும் கூறவிரும்புவது என்னவானல், அவர்களுடைய விசுவாசத்தில் அவர்களுக்குச் சுயநம்பிக்கையைப் பிறப்பிக்கவேண்டும். விசுவாசம் ஏன்என்றும், எதற்கென்றும் அவர்கள் பூரணமாக அறிந்திருப்பதோடு, அதில் திடமாயும் இருக்கவேண்டும். பிரபஞ்ச வாழ்க்கையில் அல்லது உலகப்படிப்பில் கடவுளுக்கு விரோதமான, அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் இல்லையென்ற கொள்கைகளைப் பற்றி எச்சரிக்கையாயிருக்கவும், அவைகளை எதிர்த்து வாதாடி மறுக்கவும் அவர்களுக்குத் தக்க அறிவு இருக்கவேண்டும். நாஸ்திகர்கூட்டத்திலும், வேத மணம் அறியாத சர்வகலாசாலைகளிலும் தங்கள் விசுவாசத்தைத் தக்க ஏதுக்களால் நிரூபிக்கக்கூடியவர்களாய் அவர்கள் இருத்தல்வேண்டும்.

வாலிபப்பருவம் துணிகரமும், நினைத்தகாரியத்தைச் சாதிக்கும் ஆற்றலுமுடையதாகும். வீரர்களாய் உள்ளவர்களைப் பின்பற்றவும், அவர்களைப்போன்று எதையும் சாதிக்கவும் விரும்பும்பருவம் இது. அப்படியானல் எமதுவேதத்தில் என்றுமே இலங்கித்திகழும் மகாத்துமாக்களாகிய அர்ச்சியசிட்டர்களின் சரிதைகளை ஏன் அவர்களுக்கு அறிமுகப்படுத்தமுடியாது. "உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தனது ஆத்துமத்தை இழப்பவனுக்கு அதனால் வரும் பயனென்ன?" என்ற நமது இரட்சகரின் திருவாக்கியத்தை அர்ச். இஞ்ஞாசியார் உலகப்பற்றுமிகுந்த போசிரியராயிருந்த பிரான்சீஸ் சவேரியாருக்கு அடிக்கடி எடுத்தோதுவார். காளடைவில் இந்தவாக்கியம் அர்ச். பிரான்சீஸ்சவேரியாரை அப்போஸ்தலராக மாற்றவில்லையா? இன்னும் அவர்களுக்கு யேசுவின்சிறியபுஷ்பம், அர்ச். ஞானப்பிரகாசியார், அர்ச். மரிய கொறெற்றி, பிறெடறிக் ஓசானம், மரியாயின்சேனை ஸ்தாபகரான டவ் ஆகியவர்களின் சரித்திரங்களைக் கூறுங்கள். இதுவே விவேகமும், உதாரகுணமுமுள்ள வாலிபப்பாயப் பிள்ளைகளைக் குருத்துவத்தில், அல்லது சந்நியாசத்தில், அல்லது கத்தோலிக்கசேவைகளில் கவர்ச்சிகொள்ளச்செய்யும் ஓர் வழியாகும். வாலவயதடைந்த பிள்ளைகளிடையே காணப்படும் மனவெழுச்சி, உடல்வளர்ச்சியாகிய மாற்றங்களைப் பற்றியும் இங்குகுறிப்பிட விரும்புகிருேம். இப்பருவம் கடலிலேற்படுங் கொந்தளிப்புக்கு ஒப்பானதாகும். அப்போதே அவர்களை வழிநடத்தித் துய்மையாக்கவேண்டும். அப்போதே அவர்களுடைய குணப்பண்பைக் கிறீஸ்துநாதருடையதைப் போன்றதாக்கலாம். வாலிபப்பருவம் மாமிச இச்சைகளைத் தூண்டியெழுப்பும் பாரயமமாகும். இக்காலத்தில் கற்பைக் காப்பாற்றுதற்கான நல்லபயிற்சியும், உதவியும் அருளப்பட்டால் பிள்ளைகள் தூய்மையில் ஒழுகுவார்கள். இந்தத் தூய்மைகெடின் விசுவாசமே அற்றுவிடும்.

கல்விஅறிவு சற்றேகூடிவா, விஞ்ஞான அறிவும்வளரக் கடவுள் இல்லையென்றும் சிலர்ஆட்சேபிப்பர். இது உண்மைக்கு விரோதம் என்பர். உயர்தரபாடசாலைக்குப் பிற்பட்ட காலங்களில் சிலமாணவர் இவ்விதமாகத் தர்க்கமாடுவர். அறிவும், விஞ்ஞானமும் கடவுள்விசுவாசத்துக்கு விரோதமாக இருக்கமுடியாது. கடவுளே சகலஉண்மைகளுக்கும் இருப்பிடமாக இருக்கிறார். உண்மையான அறிவிற்கும், சாஸ்திரங்களுக்கும் வழியாய்இருக்கிறார். இப்படிஇவர்கள் பிழையாகச் சிந்திப்பதற்கும், பேசுவதற்கும் காரணம், நமது உயர்தரபாடசாலைகள் விவேகமாகவும், சித்திகரமாகவும் சமய பாடத்தை ஏனையபாடங்களுடன் தொடர்புபடுத்திக் கற்பியாதுவிடுவதேயாம். சாஸ்திரங்களைக் கசடறக்கற்பது மனிதரை மேலும்மேலும் கடவுள்பக்தியில்வளரச்செய்யு மென்பதற்குச் சரித்திரங்களே தவறாத சான்றுகளாகும். ஆகவே உலகசாஸ்திரங்களைப் படிப்பிக்கும்போது கடவுளை ஞாபகப்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்களை அறிந்து அவர்களுடையமனதைக் கடவுள்பக்கமாக நாடச்செய்யவேண்டும்.

உயர்தர பாடசாலைகளில் கவனிக்கவேண்டிய இன்னெருகாரியம் என்னவானல், வாலிபர்கள் கிறீஸ்தவசீவியத்தைப் பூரணவிதாய் நடத்துவதற்குச் சரியானபயிற்சிபெறுவதே. அவர்கள் தாங்களாகவே தேவதிரவியஅனுமானங்களை அடிக்கடிபெறக் கற்றுக்கொள்ளவேண்டும். திவ்விய பூசைப் பலியின் மகத்துவத்தைஉணர்ந்து, தினமும்பூசைகண்டு, தங்கள்செயலின் மகிமையைஅறிந்து, நமதாண்டவரின் பரிசுத்ததனத்தைப் பக்தியுடன் கண்டு பாவிக்கவேண்டும். 13வயது தொடக்கம் 19வயதுவரையுள்ளவர்கள் ஞானசீவியத்தில்பயிற்சிபெறச் சுயநம்பிக்கையும், சுயதிருத்தமுமே அடிப்படைச் சாதனங்களாய் அமையவேண்டும்.

வாலவயதடைந்த பிள்ளைகளின் தேவைகள் இவையாயின் — கத்தோலிக்கபாடசாலைகளின் உத்தரவாதம் நிறைந்ததொண்டு இப்படிப்பட்டதாயின் பிறபாடசாலைகளில் கல்விபயிலும் பிள்ளைகளின்கதி என்னவாகும்? தங்கள்பிள்ளைகளைப் பிறபாடசாலைகளுக்கு அனுப்பக் கத்தோலிக்கபெற்ரேர் அனுமதிகோருகிருர்கள். இது எப்படியாகும்? சுற்ருடலும், பிதிர்வழியால்அடைந்தகுணங்களும் பிள்ளைகளின்கல்வியில் கூடியசெல்வாக்கைப் பெறுமென்பதை நீங்கள் உணர்ந்திருந்தால்—விசேஷமாக வாலப்பருவத்தில் பிறபாடசாலைகளுக்குஅனுப்ப யோசிப்பீர்களா? வாலர்கள் நினைந்தோ நினையாமலோ, அன்றேல் விருப்பத்துடனே விருப்பமின்றியோ படிப்படியாக மற்றவர்கள்செய்வதுபோல் தாங்களும் சிந்தித்துச் செய்யப் பார்க்கிருர்கள். நேரானஎதிர்ப்பு இல்லாவிட்டாலும் வேதத்தில் அக்கறைபற்ற தன்மை அவர்களை அறியாமலே அவர்களில் ஏற்படுகின்றது. இக்காரணங்களால்தான் பிறபாடசாலைகள் வேதத்துக்கும்,ஒழுக்கத்துக்கும் விரோதமானவைகளைக் கற்பியாவிட்டாலும், வேதகல்விக்கும் ஒழுக்கப்பயிற்சிக்கும் முதலிடங்கொடுக்கும் கத்தோலிக்கபாடசாலைகளில் கத்தோலிக்கபிள்ளைகள்கல்விபயிலவேண்டுமென்று திருச்சபைச்சட்டம் வகுத்துள்ளது (C 1372).

## குருமாரும் சமயகல்வியும்

திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் கிறிஸ்துவகல்வியை எல்லாச் சாதிசனங்களுக்கும் போதிப்பதல்லாது வேறல்ல. "ஆகையால் நீங்கள்போய்ச் சகல சாதிசனங்களுக்கும் நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அனுசரிக்கும்படி அவர்களுக்குப் போதியுங்கள் (ம. அ. 19). நமது அருமையான குருப்பிரசாதிகளே! உங்கள் பாதுகாப்பின்கீழுள்ள விசாரணைப் பங்குகளிலும், தாபனங்களிலும் எமது ஆண்டவரின் கட்டளையை நிறைவேற்றுதல் உங்களைச்சார்ந்த பாரமான கடமையாகும். உங்கள் பங்குகளிலுள்ள குடும்பங்களைத் தரிசித்து, அவைகள் தங்கள்சிருர்களைப் பக்தியனுசாரத்தில் பயிற்றிவருதலைப்பற்றி அன்பாக விசாரணைசெய்து கிறீஸ்துவ உண்மைகளைப் போதிக்கமுயலுங்கள். குடும்பங்களில் மூத்தசகோதார் சகோதரிகள் இருந்தால், அவர்கள் தங்கள் இளைய சகோதார் சகோதரிகளுக்குக் கிறீஸ்துவேதத்தின் அடிப்படையான உண்மைகளையாவது போதிக்கவேண்டும். கூடுமானல் அனுதினமும் பாடசாலைகளைத் தரிசித்து உற்சாகப்படுத்திப் பயனுள்ள படிப்பித்தலுக்கு மேற்பார்வைசெய்து கிறீஸ்துவசீவியத்தைப் பயிற்றுங்கள். உங்களால் கொடுக்கப்படும் மாதிரிப்பாடங்கள் ஆசிரியருக்குத் தூண்டுதலாகவும், நன்மைக்கு வழியாகவும் இருக்கும்.

உங்கள்விசாரணைப்பங்குகளில் இளைஞருக்கும், முதியோருக்கும் கிறீஸ்தவ போதகத்தைப்புகுத்துவதற்குத் திருச்சபையால் கூறப்படும் முறையொன்றைக் குறிப்பிடவிரும்புகிறேம். ஒவ்வொருபங்கிலும் ஒவ்வொரு வேதபோதகசபை இருத்தல் அவசியம். பாப்புமாரும், ஆலோசனைச் சங்கத்தவர்களும் இப்பிரமாணத்தை வற்புறுத்தி, உலகமெங்குமுள்ள எல்லாப் பங்குகளிலும் [illegible] ஆக்குவதன் [illegible] றனர். இச்சபைகளின் முக்கியநோக்கம், பிள்ளைகளுக்கும், முதியவர்களுக்கும் கிறீஸ்துவபோதகத்தை—விசேஷமாக ஞாயிறுவார ஞானஉபதேசவகுப்புகள்மூலம் போதிப்பதே. இன்னும் இச்சபைகள் செய்யக்கூடியவை பின்வருமாறு:

1. பள்ளிப்பருவம் முடிந்தவர்களாய்ப் 12 வயதுதொடக்கம் 16 வயதும், அதற்குமேற்பட்ட வயதுமுடைய கத்தோலிக்க ஆண்களும், பெண்களும் நமதுசெல்வாக்கிலும், பாதுகாப்பிலும் இருக்கவேண்டும்.

2. கிறீஸ்துவ போதகசபைகள் மூலமாக நமது வளர்ந்தபிள்ளைகளின் ஞானக்கல்வி வளர்ச்சியடையவேண்டும். ஞானக்கல்வி — விசேஷமாகச் சுவிசேஷம், அப்போஸ்தலர் நடபடி, திருச்சபைச்சரிதம், அர்ச்சியசிட்டர்களின் சீவியசரிதை, முறையான கிறீஸ்துவசீவியம், பக்தியாதிய இவைகளைப் போதிப்பதில் அடங்கும்.

3. இச்சபைகள் கத்தோலிக்க உற்சாகத்தையும், வளர்ச்சியையும் பலப்படுத்தவேண்டும். இதுதான் பரந்த உன்னத கத்தோலிக்க இலட்சியம். இதுவே சகலசாதிசனங்களுடையவும் ஆத்துமசரீர முன்னேற்றத்துக்கு ஏதுவாகும். பரிசுத்தபாப்புமாரின் சிறந்த சாதாரணநிருபங்களில் கூறியுள்ளபடி, இச்சபைகள் பாப்புமாரின்போதனைகளைப் பிரசித்தப்படுத்துவதற்குப் பிரயத்தனங்கள் செய்யவேண்டும்.

4. வளர்ந்தவர்கள் யாராயினும் சமயசம்பந்தமாகவும், தேவதிரவிய அனுமானங்கள் சம்பந்தமாகவும் போதனைகள்வேண்டின் சமயவகுப்புகள்மூலமாக அவர்களின் அறிவைப் பெருக்கவும், அதனை நடைமுறையில் கொண்டுவரவும் தருணங்கள் கொடுபடவேண்டும். ஒவ்வோர்சபையும் வளர்ந்தோர்க்கென வகுப்புகள்நடத்தவேண்டும்.

5. ஞாயிறுவார ஆராதனைகளை வளர்க்கவும், நிலைநாட்டவும் முயலவேண்டும்.

6. ஞானவாசினையை உற்சாகப்படுத்தவும், சனங்களுக்குத் தீயபுஸ்தகங்கள் மட்டிலுள்ள பற்றுதலை அகற்றவுமாக ஞானவாசினைப் புஸ்தகங்களையும், வேறுகவர்ச்சியான நல்லபுஸ்தகங்களையும்பெறவசதிசெய்யவேண்டும். கத்தோலிக்க பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள், காலத்துக்குக்காலம் வெளிவரும் சஞ்சிகைகள் ஆதியன சனங்கள்மத்தியில் இடம்பெறவேண்டும்.

7. கோவில் கீர்த்தனங்களிலே பற்றுதலைஉண்டாக்கிப் பூசை, ஆசீர்வாதவேளைகளில் கூட்டமாகப்பாட உற்சாகம்அளிக்கவேண்டும்.

8. வேதபோதகசபைகள் கத்தோலிக்கஐக்கியத்தின் மையமாயிருக்கவேண்டும்.

எல்லாப்பகுதிகளிலும் இதுபோன்ற சபைகளைஸ்தாபித்து, அவைகளை முக்கிய இடம்பெறச் செய்வதானது மேலேகாட்டிய நியாயங்களினல் அவசியம்என்பது தெளிவாகிறது. இச்சபைகளில் இடம்பெற வேண்டியவர்கள் ஞானஉபதேசத்தைப் படிப்பிக்கவும், படிப்பிக்க உதவியாயிருக்கவும் கூடியவர்களே. விசேஷமாகப் படிப்பித்தல்முறைகளில் தேர்ச்சியுள்ள ஆசிரியர்களும், ஆசிரியைகளுமாவர். நமது அருமையான குருப்பிரசாதிகளே! இச்சபையின் பிரமாணங்களைக் கற்று, அவற்றை உங்கள்பங்குகளில் ஸ்தாபியுங்கள். "புத்தியுள்ளவர்கள் விடியற்கால நட்சத்திரம்போல் பிரகாசிப்பார்கள். நீதியைப் போதிப்பவர்களோ வானத்து நட்சத்திரங்களைப் போல் என்றும்நிலைநிற்பார்கள்.

(Dan. XII. 3)

இஃது. யாழ்ப்பாணத்திலே 1955-ம் ஆண்டு பங்குனி மாதம் 31-ந் திகதியன்று நமது மேற்றிராணியுடனும், கருமாதிகார சுவாமியவர்களின் சாட்சியத்துடனும் விடுக்கப்பெற்றது.

✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O.M.I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்.

மேற்றிராணியாரின் கட்டளைப்படி
எஸ். இம்மனுவல் சுவாமியார்
கருமாதிகாரி

இந்தநிருபம் ஒரேதடவையில் வாசித்து விளங்கப்படுத்தக் கூடியதன்று. அதனல் இடையிடையே இதனைவாசித்து விளங்கப்படுத்துதல் நன்று.



## செபஅப்போஸ்தல சபை

### சாதனங்களும் அனுசாரங்களும்

(முன்தொடர்ச்சி)

### தேவதாயார்மேல் பக்தி

சென்ற இரண்டுஇதழ்களிலும் தினசரி காணிக்கை, திவ்வியபலிபூசை, பரிகாரநன்மைஆதியனபற்றி அறிந்தோம். இம்முறை மூன்றும் அனுசாரமாகிய "தேவதாயார்மேல் பக்தி" என்பதை ஆராய்வோம்.

பரிசுத்த தேவதாயார் எல்லாம்வல்ல சர்வேசுரனுக்கு முன்பாக நமது அன்புத்தாயாகவும், நமக்காக எப்பொழுதும் மனுப்பேசுகிறவருமாக இருக்கின்றூர். அவருடைய இரக்கமுள்ள மன்ருட்டினல் நமதுசெபங்கள் ஒருதனிப்பட்ட வலிமை அடைகின்றன. ஆகையினல்தான் சபை அங்கத்தவர்கள் கன்னிமரியாயின் தாய்க்குரிய மாசற்ற இருதயத்தினிடம் சென்று அவர் வழியாகத் தங்கள் தினசரி காணிக்கையை யேசுவின் திருஇருதயத்திற்கும், பிதாவாகிய சர்வேசுரனுக்கும் ஒப்புக்கொடுப்பார்கள். கிறீஸ்துநாதருடையவும், நம்முடையவும் தாயாராகிய அவருடைய இரக்கம்மிகுந்த இருதயத்தில் பிள்ளைகளுக்குரிய தங்கள் நம்பிக்கையின் அடையாளமாகத் தினந்தோறும் தனிமையிலென்கிலும், பொதுவிலென்கிலும் அவருடைய செபமாலையைக் கூடுமானல் முழுமையும், அல்லது ஒரு பாகமாகிலும்சொல்லக் கேட்டுக்கொள்ளப் படுகிருர்கள்.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

நாஙகள் எட்டுவருடகாலம் பிள்ளைப் பாக்கியம் இல்லாமல் இருந்து சதாசகாய மாதாவின் உதவியினல் இப்போது அந்தப்பாக்கியத்தைப் பெற்றிருக்கிருேம். மாதா எனக்குச்செய்த உதவிகளுக்காக நான் என்முழுஇருதயத்துடன் அவவுக்கு நன்றிதெரிவித்து நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன். அவவுடையநாமம் எங்கும் புகழப்படுவதாக.

இளவாலை — க. மத்தேயு

* * *

### நன்றியறிந்த தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதாவினதும், அர்ச். செபஸ்தியாருடையவும் மன்ருட்டினல் எனதுகடைசிப்பிள்ளைக்குத் தலையில் உண்டுபட்ட கட்டு குணமடைந்தும், மற்றும் இருபிள்ளைகளுக்கு நெடுநாளாக விருந்த இருமல் சுகப்பட்டும், மச்சாளுக்கு வந்த தொற்றுநோய் எங்கள்ஒருவருக்கும்வராமல் அற்புதமாய்க் காப்பாற்றவும் படலாயினேம். மேலும், எனதுபிள்ளைகள்மூவரும் பரீட்சையில்சித்தியும்அடைந்தார்கள். இவைகளுக்காக அவர்களுக்கு நன்றிபாராட்டு முகமாக இதனைப் பிரசுரஞ்செய்கிறேன். இவர்களுடைய நாமம் புகழப்படுவதாக.

சிங்கப்பூர் — நா. இராசம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



## பாடசாலைக்கோணம்

**வினு:** உண்மையைஅறிய உதவி செய்வதற்கு அதன் ஏனையபக்கங்களையும்பார்க்க உதவிசெய்தலல்லோ முறை. ஆனல், கத்தோலிக்க திருச்சபையானது பிறசமய கோவில்களுக்குப் போகவோ, அல்லது பிறசமயப் புஸ்தகங்களை வாசிக்கவோ விடாமல் கிறீஸ்துவர்களைத் தடுப்பதேன்?

ஜே. ஏபிரகாம்ஸ்,
தலவாக்கெல்லை.

**விடை:** கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரவிரும்புமொருவர் வடக்குத்திசையைநோக்கி வருவதற்குப்பதிலாய்த் தென்திசைநோக்கிப் போகும்ஒவ்வோர்மைலுக்கும் அவர் யாழ்ப்பாணத்திலிருந்து அப்பாலே அப்பாலே போகின்றாரல்லவா?

தேவனுகவே வெளிப்படுத்திய உண்மையை நிச்சயமாய்ப் பெற்றுக்கொண்டவர்களாகிய கத்தோலிக்கர் அவ்வுண்மைநிலையத்தைவிட்டு அப்பாலேபோகவேண்டிய அவசியமில்லை. அதனூற்தான் திருச்சபையானது தனதுமக்களை வீணுக அலைந்து திரிந்து மோசம்போகவிடாமல் கட்டுப்பாடு பண்ணுகின்றது.

Sacred Heart College, Karaveddy

---

## திருப்பலி

### விசுவாச மந்திரம்

ஒருநாள் எமதுஆண்டவர் சீஷரிடம் கேட்டார்: "சனங்கள் என்னைப்பற்றிக் கூறுவதென்ன?" "சிலர் நீர், ஞானஸ்நானங் கொடுத்த அருளப்பர் என்றும், வேறுசிலர் நீர் எலியாஸ் என்றும், இன்னுஞ்சிலர் நீர் ஓர்தீர்க்கதரிசி என்றும் சொல்லுகிருர்கள்" என்று மறுமொழி கூறினர்கள்.

அப்பொழுது ஆண்டவர் சீஷரை நோக்கி. "நீங்கள் என்னைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார். எல்லாருடையவும் போரல் அர்ச். இராயப்பர், "சீவியரான சர்வேசுரனின் குமாரன், கிறீஸ்து நீர் தாமே" என்ருர்.

அப்படிக்கூறியது ஒரு ஆச்சரியமான விசுவாசமுயற்சி, நாமும் கிறீஸ்துநாதரில் உள்ள விசுவாசத்தை அறிக்கையிடவேண்டும். திருச்சபையின் வழியாய்த் திவ்வியயேசு நமக்குக்கூறுகிற தெல்லாவற்றையும் நாமும் விசுவசிக்க வேண்டும்,

ஆண்டவர் உங்களிடம்வந்து "நீங்கள் விசுவசிக்கிற தென்ன?" என்று கேட்டால், நீங்கள் என்ன மறுமொழி கொடுக்கவேண்டும்தெரியுமா? நீங்கள் அப்போஸ்தலரின் விசுவாசப் பிரமாணத்தை உச்சாரணஞ் செய்யலாம். அல்லது "நிசீன் பிரமாணம்" என்று அழைக்கப்படுகிற வேறொன்றைக் கூறலாம். சுவிசேஷத்தின்பின் சொல்லப்படுகிற விசுவாசமந்திரம் இதுதான். இது ஞாயிற்றுக் கிழமைகளிலும், வாரத்தில் சிலதிருநாட்களிலும் சொல்லப்படும்.

இந்த விசுவாசப் பிரமாணங்களிலே சொல்லப்படுகிறவைகளை ஏன் விசுவசிக்கிறீர்கள்? ஏனெனில், அவைகள் சர்வேசுரன் அறிவித்த சத்தியங்கள், அவர் அறிவிக்கிறவைகள் நிதார்த்தமானவை. அல்லாமலும் நீங்கள்சொல்வதை உங்கள் தோழன் விசுவசித்தால் உங்களுக்குச் சந்தோஷம் உண்டாவது போல, சர்வேசுரன் கூறுவதை நாம் விசுவசிக்கும்போது அவர் சந்தோஷப்படுகிருர்.

ஆனல், விசுவசிப்பது மாத்திரம் போதாது. விசுவாசம் படிப்பிப்பது போலச் சீவிக்கவேண்டும். உதாரணமாக, சர்வேசுரன் நமக்குப் பத்துக்கற்பனைகளைத் தந்திருக்கிருரென்று விசுவசிக்கிறீர்கள். அந்தக்கற்பனைகளை அனுசரிப்பதற்கு முயற்சிக்கவும் வேண்டும். சர்வேசுரன் உங்கள் தந்தையென்று விசுவசிக்கிறீர்கள் அல்லவா? அப்படியாகில் நல்லபிள்ளையைப் போல அவரைநேசித்து அவரை மன்ருடவேண்டும்.

சற்பிரசாதத்தில் யேசுநாதர் இருக்கிருர் என்று விசுவசிக்கிறீர்கள். அப்படியானல் அவரை நீங்கள் ஆராதிக்க வேண்டும். அவரைச் சற்பிரசாதத்தில் உட்கொள்ள வேண்டும்.

யேசு சகலருக்காகவும் சிலுவையில் மரணித்தார் என்று விசுவசிக்கிறீர்கள். எல்லாரும் தம்முடன் மோட்சத்தில் இருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிருர். ஆகையால், பிறமனிதர் மோட்சத்தை அடைய நீங்கள் உதவிசெய்ய வேண்டும். அவர்களுக்கு உத்தமமுன்மாதிரி காட்டவேண்டும். அவர்களுக்காக மன்ருடவேண்டும். எல்லாருக்காகவும் — அறிந்தவர்களுக்காகவும், அறியாதவர்களுக்காகவும் மன்ருடுங்கள். உங்களுக்கு வெறுப்பானவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ள மறந்து போகாதேயுங்கள்.

---

## அண்ணு சொல்லுவது:

அருமைச் சகோதரங்களே!

தபசுகாலத்தின் கடைசிநாட்கள் ஆகிவிட்டன. நாம் யேசுவின் திருப்பாடுகளை முழுக்கருத்துடனும் நினைக்கும்படி திருச்சபை நம்மை ஏவுகிறது. நமது மனதில் இருக்கவேண்டிய துக்கத்துக்கு அடையாளமாகச் சுருபங்கள் எல்லாம் மூடப்பட் டிருக்கின்றன.

"சர்வேசுரா தேவரீர் பக்தியற்ற சனத்துக்கு விரோதமாய் என் நியாயத்தை விசாரித்து, கெட்டவனும், கபடுள்ளவனுமாகிய மனிதனுக்கு என்னைத் தப்புவியும்," என்ற சங்கீத ஆகமவசனம திருப்பாடுகளின் ஞாயிறுப்பூசையின் ஆரமபவாக்கியம். இதைக் கூறிக்கொண்டு திவ்வியயேசு தமதுபாடுகளைத் தொடங்குவது போலத் திருச்சபை காட்டுகிறது.

யூதசனங்களின் பராகண்டிதத்தைப்பற்றி முறையிடும் நரதேவனின் உள்ளஉணர்ச்சி இதில் காணப்பட வில்லையா? அவரைச் சேவித்து அவருக்காகத் துன்பதுயரப்பட நாம்கொள்ளும் வேண்டா வெறுப்பைப் பற்றிக் குறைகூறுவதை நாம் காணுகிரோமா?

கிறீஸ்துநாதரது பாடுகளின் பள்ளியில் நாமும் பராக்கின்றிப் படிக்கும் பொருட்டு இக்கால சடங்காராதனை எல்லாம் அமங்கலமாய் இருக்கிறது.

யேசுவின் திருப்பாடுகளைத் தியானித்து "எதிலிருந்து மரணம் உண்டானதோ அதிலிருந்து சீவியமும் உதிக்க வேண்டு" மென்று உணரக்கடவோம்.

யேசு தமது பாடுகளினல் பாவத்தைப் போக்கினர்; பரகதியைத் திறந்து வைத்தார்.

யேசு மரித்தபின் உயிர்த்தெழுந்தார். உத்தான சந்தோஷத்தில் நாம் சேர்ந்துகொள்ள வேண்டும். யேசுவின் பாடுகள் முடிந்து விட்டனவென்று நாம் ஆனந்தங் கொள்ளவேண்டும்.

அதற்காக நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து, நன்மை உட்கொள்ள வேண்டும். யேசு நம்உள்ளத்தில் இருக்கும்பொழுது, எம்மாவுசுக்குச் சென்றசீஷர் கூறியதுபோல, "ஆண்டவரே எங்களுடன் தங்கும்" என்போம். எமது அழைப்பு அவருக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும். அழைப்பிற்கு இணங்கி எம்முட னிருப்பார். யேசு எம் உள்ளத்தில் இருந்தால் அதுவே மோட்சம். அதைவிட வேறுஆனந்தமும் வேண்டுமோ! சுபம்.

உங்கள் அன்புள்ள
அண்ணு.

---

## பாவசங்கீர்த்தனம்


பாவசங்கீர்த்தனத்துக்குச் செல்லும்பொழுது, கோவிலுள் நுழைந்தவுடன் கொமபிசத்தட்டியை முற்றுகையிடாதீர்கள். நல்லகொம்பிசத்துக்கு ஆயத்தஞ்செய்ய வேண்டும். ஆயத்தத்திற்கு எவ்வளவு நேரம்?

மாதம ஒருமுறை பாவசங்கீர்த்தனஞ் செய்கிறதாய் இருந்தால் கால்மணித்தியாலம் போதுமானது. ஆயத்தஞ்செய்கிறதென்று கணக் காணுதேயுங்கள். செபியுங்கள். பாவங்களை நினையுங்கள். அவைகளைவிட்டு மனம் வருந்துகிரேமென்று ஆண்டவருக்குச் சொல்லுங்கள்.

---

## கண்டு பிடியுங்கள்

மேலேகாணப்படும் சித்திரத்தில் உங்களால் எத்தனை சற்சதுரங்களைக் கண்டுபிடிக்கமுடியும்?



35 சற்சதுரங்களை யான் கண்டு பிடித்துவிட்டேன். நீங்களும் கண்டு பிடித்தீர்களா?

"பூச்சி"

---

## தமிழாக்கம்

சென்றவாரக் "காவல"னில் தமிழில் மொழிபெயர்க்கும்படியாக ஆங்கிலத்தில் ஒருபகுதி கொடுக்கப்பட்டிருந்தது. அவற்றின் தமிழாக்கம் மேலே தரப்பட்டிருக்கின்றது.

**நாங்கள் செருப்பு அணிவதேன்?**

1. மேன்மைக்காக.
2. அழகாயிருப்பதால்.
3. பாதங்களைப் பாதுகாக்க.

**பெண்கள் பூக்களை அணிவதேன்?**

1. அழகாயிருப்பதால்.
2. பூக்களின்விலை மலிவாகையால்.
3. எல்லோர்வீட்டிலும் பூந்தோட்டம் இல்லாமையால்.

**உமது உடையில் தீப்பற்றினல்?**

1. ஐயோ! ஐயோ! வென்று நான் அலறுவேன்.
2. தீ அணையும்வரை நான் நிலத்தில் புரளுவேன்.
3. நான் உதவிதேடி ஓடுவேன்.

தமிழாக்கம் செய்தவர்கள்:

அன்ரனி சோசா,
போளவத்தை, தங்கொட்டுவ.

கத்தரீன் சின்னமலர் மிராண்டா,
"ஆவே மரியா" கன்னியர்மடம்,
நீர்கொழும்பு.

ஏ. ஜே. மைக்கேல்,
59, பழைய கொலன்னுவ,
தெமட்டகொட, கொழும்பு.

குணராணி அருளானந்தம்,
ஏழாலை, சுன்னுகம்.

அ. தி. சோதிமலர்,
ரே. க. பாடசாலை, உயிலங்குளம்.

---

## கணிதப்பகுதி

### வீட்டுமுற்றத்தில் எத்தனை ரூபா?

நானும், எனதுஅண்ணுவும் கடைக்குச்செல்லப் புறப்பட்டோம். அப்போது எங்கள்தகப்பனுர் இருவருக்கும சில ரூபாநோட்டுகளைத் தந்தார். வழியிலே செல்லும்போது அண்ணு என்னைப்பார்த்து, "தம்பி உன்னுடையபணத்தில் ஒரு ரூபா தந்தால் என்னிடம் இரண்டுபங்கு; உன்னிடம் ஒருபங்கு" என்ருர். நான் அவரை நோக்கி: "அண்ணு, நீங்கள்வைத்திருப்பதில் ஒருரூபா நோட்டுஒன்றை எனக்குத்தந்தால் உங்களிடமும், என்னிடமும் சமதொகை இருக்கும்" என்றேன்.

1. நாங்கள் வீட்டுமுற்றத்தில் நிற்கும்போது ஒவ்வொருவரும் என்ன தொகை வைத்திருந்தோம்?
2. வீட்டுமுற்றத்தில் தகப்பனுர் இருவருக்கும் பங்கிட்டுத்தந்த மொத்தத்தொகை எவ்வளவு?

எம். பே. த. தவரேரா,
த. ஆண்பாடசாலை, போளவத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரியான விடைகள்

சென்றவார இதழில் வெளியான கணிதப்பகுதியின் சரியானவிடைகள் :

1. பாட்டி சுட்ட அப்பங்கள் 25
2. அல்போன்ஸ் சாப்பிட்டது 11
3. கிறிஸ்தோப்பர் சாப்பிட்டது 6
4. றிச்சேட் சாப்பிட்டது. 8

சரியானவிடைகள் அனுப்பியவர்கள் :

அன்ரனி சோசா,
போளவத்தை, தங்கொட்டுவ.

எம். பேதுரு தமியான் தவரோா,
த. ஆ. பாடசாலை, போளவத்தை.

கத்தரீன் சின்னமலர் மிராண்டா,
“ ஆவே மரியா ” கன்னியர்மடம்,
நீர்கொழும்பு.

ஏ. ஜே. மைக்கேல்,
59; பழைய கொலன்னவ,
தெமட்டகொட, கொழும்பு.

ஜெறூட் நெல்சன்,
றோ. க. த. கலவன்பாடசாலை,
மூன்னக்கரை.

குணராணி, அருளானந்தம்,
ஏழாலை, சுன்னுகம்.

எம். யோசேப் எலியாஸ்,
சென் அன்ட்றூஸ் பாடசாலை,
புத்தளம்.

அ. தி. சோதிமலர்,
றோ. க. பாடசாலை, உயிலங்குளம்.

ம. வின்சென்ற்,
அடப்பன் றோட், யாழ்ப்பாணம்.

## போராபத்துக் கேதுவான போர்மோசா துவீபம

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டிலே போர்மோசாவின் கிழக்குக் கடற்கரையில் ஒரு கோட்டையைக் கட்டினார்கள். 1661-ம் ஆண்டுவரை இவர்கள் அந்தத்தீவில் தங்கியிருந்தார்கள். ஐரோப்பியர் இங்கு முதன்முதலாகச் சென்றபொழுது அது நரமாமிசபட்சணிகள் வசிக்கும்நாடாகவும், கடற்கொள்ளைக் கூட்டத்தினர் வசிக்கும் தீவாகவும் கருதப்பட்டது. இது அப்பொழுது சீனதேசத்துடன் தொடர்புகொண்டிருக்கவில்லை. ஆனால், தனிப்பட்டமுறையில் சீனர்கள் அங்குபோய் இருந்ததுண்டு.

போர்மோசாவின் சனத்தொகை சுமார் 90 லட்சமாகும். இவர்கள் எல்லோரும் சீனவம்சா வழியினரே. ஆனால், இங்கு பூர்வீகக் குடிகளாகச் சுமார் ஒருலட்சம்மக்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஒருகாலத்தில் போர்மோசாவுக்குவரும் அந்நியர்களின் தலைகளை வெட்டிவந்ததாகச் சொல்லப்படுகிறது. சீனா 1662-ம் ஆண்டு இதை முதல்முறையாகக் கைப்பற்றியது. 1895-ம் ஆண்டுவரை இது சீனாவின் ஆதிக்கத்தில் இருந்தது. அதன்பின் ஜப்பானுக்கும், சீனாவுக்குமிடையே ஏற்பட்டயுத்தத்தில் இது ஜப்பானின் கைக்கு மாறியது. ஜப்பான்தான் போர்மோசாவுக்குத் தைவான்என்று மறுபெயர்வைத்தது. இரண்டாவது உலகயுத்தத்துக்குப்பின் போர்மோசா மீண்டும் சீனாவிடமே ஒப்படைக்கப்பட்டது.

சீனாவில் உள்நாட்டுயுத்தம் ஆரம்பமானபோது கம்யூனிஸ்தர்கள் சீனதேசத்தைக் கைப்பற்றிக்கொண்டார்கள். மாஷல் சியாங் கே ஷெக் அவர்கள் சுமார் பத்துலட்சம்சீன அகதிகளுடன் போர்மோசாவிற்போய்க் குடியேறிச் சீனத்தேசிய அரசாங்கத்தை ஸ்தாபித்தார். அவரிடம் இப்பொழுது 4 லட்சம் போர்வீரர் இருக்கின்றனர். அமெரிக்கஇராணுவம் இவர்களுக்கு நவீனமுறையில் பயிற்சியளித்து வருகிறது. போர்மோசாதீவு நவசீனாவின் ஒருபகுதியென்றும், அதைச் சியாங் கே ஷெக்கிடமிருந்து விடுவிப்பது தங்கள் உள்நாட்டுவிவகாரமென்றும் கம்யூனிஸ்தசீனா கூறிவருகின்றது.

# “சோலையுள் தெய்வச்சுதன்”

அறுசீர் விருத்தம்

மன்னுயிர் மீட்கத்தானோர் மனிதனய் வந்ததேவன்
தன்னுயிர்ப் பலியிற்சாரும் தாங்கொணு வாதைதன்னை
உன்னிய போதுதுாய உடலெலாம் உதிரம்பீறிச்
சென்னிகன் மேட்டில்மோதச் செந்துகில் தோய்ந்தார்அந்தோ!

●

அந்தகன் விழிக்கச்செய்த அமுதமார் உமிழ்நீர்வற்றக்
கந்தநற் தைலம்பட்ட கால்களிற் குருதிசொட்டச்
சிந்திய சிகையுந்தாழ்ந்து திருமுக மலரோடொட்ட
எந்தையும் சிந்தைநொந்தார் ஏங்கினர் பதைத்தார்அந்தோ!

●

அலைகடல் அமர்த்துவாயும் அலகைகள் அடக்குகையும்
மலைதனில் விசுவரூப மாகிய மேனிதானும்
தொலைவழி நடந்துவேதஞ் சொல்லிடச் சோராக்காலும்
உலைமுகத் துற்றபொன்போல் உருகிடத் துடித்தார்அந்தோ!

●

பாங்குற அணைத்தாய்இந்தப் பாத்திரம் என்னைவிட்டு
நீங்குதல் பிரியமாகில் நீக்குக ஆனல்மற்று
ஈங்கென திதயம்போல இல்லவே தந்தாய்ஈது
ஆங்குன தெண்ணம்போல ஆகுக என்றூர்அந்தோ!

●

வல்லவன் உரைத்தவார்த்தை வானெழுந் திசைத்தபோதில்
துல்லிபத் தேவன்கேட்டுத் தூதனை மைந்தன்மாட்டு
அல்லிலி லனுப்பவந்த அருவனு முருவமேந்திச்
சொல்லிய வார்த்தைகேட்டும் சோர்ந்துமெய் துடித்தார்அந்தோ!

●

பூரண மதியும்தேவ புத்திரன் துயரால்நொந்து
வாரண முகிலால்தன்னை மறைத்தனன் பனிநீர்தேக்கிச்
சீரணி சோலையாவும் சிந்தின அழுதாற்போல
தாரகை மின்னிமின்னித் தவித்தன தரணிநோக்கி

— “யுவன்” கரம்பொன்.

## செஞ்சதுக்கமும் வெண்சதுக்கமும்

“மஸ்கோநகரின் செஞ்சதுக்கம் பாத்திமாவின் வெண்சதுக்கத்தில் ஓர்விடையைக் கண்டடைந்திருக்கிறது. கம்யூனிஸத்துக்குப் பலியானவர்களின குருதியால் சாயந் தோய்க்கப்பட்ட துப்பாக்கிமுனை ஈட்டிகளும், கொடிகளும் நிறைந்துள்ள செஞ்சதுக்கமானது, பாத்திமா நாயகியின் திருச்சாயலுடனும், சமாதானத்தின் இராக்கினிக்கு ஆசாரவணக்கமாக விசுவாசிகளால் ஆகாயத்தில் உயர்த்தப்பட்டு அசைந்தாடும கைக்குட்டைகளுடனுங்கூடிய பாத்திமாவின் வெண்சதுக்கத்தை எதிர்கொண்டுநிற்கின்றது. காலம் வரும். அப்போது செஞ்சதுக்கத்தின் கொடுங்கோன்மைப் பலமும், வெண்சதுக்கத்தின் ஆத்மீகபலமும் ஓர்ஈறுந்த போராட்டத்திலே ஒன்றையொன்று எதிர்த்து முட்டிக்கொள்ளும். கம்யூனிஸம் ஆயுதபலத்தைக்கொண்டு தோற்கடிக்கப்படமாட்டாது. ஆனால், அதற்கு மாறாய் மனந்திரும்புவதாலே வெற்றிகொள்ளப்படும. வெண்சதுக்கத்தின் திருநாயகியானவர் கம்யூனிஸ்தர்களின் மரணத்தை ஆசிப்பதில்லை. ஆனால், அவர்கள் மனந்திருபபப்பட வேண்டும்; கடவுளோடு சமாதானமாய் வாழவேண்டுமென்றே ஆசிக்கின்றார். இன்னும் ஐம்பதுவருடகாலத்தில் செஞ்சதுக்கம் வெண்சதுக்கமாயிருக்கும். கொழுக்களை வாள்களாக மாற்றியமைக்கிற சுத்தியலும், தானியம் வெட்டப்படுவதுபோல மனிதஉயிரை வெட்டிச்சிதைக்கின்ற அரிவாளும் தங்களுக்குக் குறிக்கப்பட்ட காதகமான பிரயோகங்க[illegible] சுத்தியல் ஓர் [illegible]யும், அரிவாள் தேவதாயாரின் பாதங்களில் ஓர் சந்திரனும் போன்றனவாகி மனிதஉயிர்களை அறுவடைசெய்வதைநிறுத்திக்கொள்ளும். சோவியற்அதிகாரபீடமாகிய கிறெம்லின்முன்பாக லட்சக்கணக்கான வெண்கரங்களிலே வெண்கைக்குட்டைகள் பாத்திமாநாயகிக்கு ஆசாரவணக்கமும், நேசமும்காட்டுமுகமாகக் காற்றிலே அசைந்தாடும். அப்போது அத்திருநாயகி தமது திருக்குமாரனாகிய திவ்வியகர்த்தரின் குருதிபோன்ற சிவப்பான செஞ்சதுக்கத்தினூடாக ஜெயகோலமாக எழுந்தருளுவார். மகாப்பலம்பொருந்தியநாடுகளை நிலைகலங்கச் செய்யும்படியாகப் போர்த்துக்காலைப்போலும் உலகின் அதிகஞ்சிறிய — அதிகம் பலவீனமுடைய நாடுகளில் ஒன்றைக் கடவுள் தெரிந்துகொள்ளுகிறார்என்பதை அப்போதுரூஷியா அறிந்துகொள்ளும். மனித இருதயங்களில் திரும்பவும் சமாதானம்வரும்.”

இவ்வாறு அமெரிக்க பிரபலபிரசங்கியாரும், வானொலிப் பேச்சாளரும், சிறந்த எழுத்தாளரும், எத்தனையோ பெரிய மேதாவிகளை மனந்திருப்பிக் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்த்துள்ளவருமான புல்ரன் ஷீன் மேற்றிராணியார் எழுதியிருக்கின்றார்.

## சென்னைக்கவர்னரும் மிஷனரிமாரும்

சென்னைக்கவர்னரும், இந்து சமயத்தவருமான ஸ்ரீபிரகாச அவர்கள் அம்பூரிலேசமீபத்தில் பெதெஸ்தா ஆஸ்பத்திரியைத் திறந்துவைத்துப் பேசியபோது, “உங்களுக்கு யாதாமோர் தீங்கும்வரமாட்டாதென்று இந்திய அரசாங்கத்தின் பேராலும், சென்னை அரசாங்கத்தின் பேராலும் நான் உறுதிமொழி சொல்லுகிறேன்” என்று மிஷனரிமாருக்குக் கூறலாயினர். மேலும் அவர் பேசியதாவது: “நீங்கள் கடவுளின் தொண்டைச் செய்கிறீர்கள். இன்னும் மேலாய் உண்மையான பெறுமதிகளை மதிக்காதமக்களுக்கு அதிகம் நல்ல மாதிரிகையைக் காண்பிக்கிறீர்கள். சிறந்த விதமாகச் சேவைபுரிவது எப்படியென்று நீங்கள் படிப்பிக்கிறீர்கள். நீங்கள்செய்தசேவைகள் எல்லாவற்றிற்கும நாங்கள் நன்றியுடையவர்களாய் இருக்கிறோம. ஆஸ்பத்திரிகள் பெரியஸ்தாபனங்களாகும். அதனால் ஓர்ஆஸ்பத்திரியை அடியிடுவதில் உதவிசெய்கிற எவரும் ஓர்பெருஞ்சேவை செய்கிறார். இந்த ஆஸ்பத்திரிகளை அடியிட்டுத் தேசத்துக்குச் சேவைசெய்கின்ற கிறீஸ்துவ மிஷனரிமார்களுக்கு நான் நன்றியுடையவராய் இருக்கிறேன். பிணியாளர்களைக் குணப்படுத்துவதற்காக எசமான் இடத்துக்கிடஞ்சென்றாரென்று வேதாகமம் நமக்குக்கூறுகின்றது. அவர் மனிதவர்க்கத்துக்கு ஓர்பெரிய பாடத்தைப் படிப்பித்தார். எசமான் விசேஷமாய்ப் பயங்கர நோய்களால் பீடிக்கப்பட்டவர்களுடன்தான் நண்பர்களை ஆக்கிக்கொண்டார். அவர் தமது சொந்தக்கரங்களினால் அவர்களுக்குச் சேவைசெய்தார். இன்னும் அவரைப்பின்பற்றுகிறவர்கள் உண்மையான போக்கில் அவருடையசெய்தியைக் கொண்டுசெல்வது ஆச்சரியமல்ல. ஆனால், மிஷனரிமாரின் நல்ல விசுவாச பிரமாணிக்க விஷயமாய்க்காலந்தோறும் தப்பெண்ணங்கள் பிறந்துகொண்டு வருகின்றன. ஆட்கள் நற்தொண்டு ஆற்றிக்கொண்டு வரும்போது ஏன் சந்தேகம் ஏற்படவேண்டும்” என்பதே.

## வளமிகு வன்னிநாடு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லாறு, வன்னிப்பகுதி நாட்டுப்பாடல்கள் முதலியவற்றைச்சேகரித்து நல்ல முறையில் வெளியிட நாட்டங்கொள்ள வேண்டுமெனப் பணிவுடன்வேண்டிக் கொள்கின்றேன்.

### முடிவுரை

வன்னிநாட்டின் வரலாற்றைத் தமிழிலஎழுத வேண்டுமென்ற விருப்பம் நெடுங்காலமாக எனக்கிருந்துவருகின்றது. சிவில்சேவையைச் சேர்ந்த திரு. ஜே. பி. லூயிஅவர்கள் எழுதிய A Manual of the Vanni Districts, Ceylon, 1895—எனும் நூலினைக் காலம்கிடைத்த பொழுதெல்லாம் மொழிபெயர்த்துவந்தேன். வன்னி நாட்டைப் பற்றியகுறிப்புகளைச் சேகரிப்பதை ஒருபொழுதுபோக்காகக் கருதினேன். எனினும் யான்கருதிய அளவுக்கு வரலாற்றுக்குறிப்புகள் கிடையாமையால், வன்னிநாட்டு வரலாற்றை ஆறுதலாக எழுதலாம்என்ற சோர்வுமனப்பான்மையுடன் தூங்கிக்கொண்டிருந்தஎன்னை மன்னார்-வன்னி டிஸ்திரிக் சனசமூகநிலைய அதிபர் விழித்தெழச் செய்துவிட்டார். பண்டை வன்னிநாட்டைப்பற்றி ஒரு கட்டுரை யெழுதுமாறு அவர்வற்புறுத்தினார். அதன்பயனாக எழுந்ததே இச்சிறுகட்டுரை. இதன்கண்ணுள்ள குறைகளை அன்பர்கள் அறிவிப்பார்களாயின் அவர்கள் வன்னிநாட்டுவரலாற்றைச் செம்மைப்படுத்தப் பேருதவி புரிந்தவர்களாவார்கள்.

— ஈழத்தொண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சதாசகாயமாதாவின் நூருவது நோவனைத் திருவிழா

இத்திருவிழா 16-3-55 புதன்கிழமை தோப்பு, அர்ச். பிலிப்புநேரியார் ஆலயத்தில் பக்திச்சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. அன்றுகாலை 7மணிக்கு வண. கட்டளைக்குரவா ஜே. எட்வின் பெர்னுந்து சுவாமியவர்கள் ஒப்புக்கொடுத்த திவ்வியபூசைப்பலியுடன் விழாநிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. மாலை 2மணிதொடக்கம் இவ்விசாரணைப்பங்கின் சுற்றுடலிலுள்ள இருபத்தைந்துக்குமேற்பட்ட சிங்கள, தமிழ்ப் பாடசாலைகளின் மாணவர் மாணவிகளாய் ஈராயிரவருக்கு மேற்பட்டோர் கும்பல்கும்பலாய் ஆலயம் வந்தெய்தினர். மாலை 4-30மணிக்குக் கொழும்பு அதிமேற்றிராணியாண்டவர் இங்கு சமுகமளித்தனர். ஆலயத்தின் எதிரேயுள்ள சிலுவைமர முச்சந்தி முதல் கோவில்வளவுவரை பாடசாலைச் சிறார்களும், மாதாவின் ஏனையபக்தர்களும் ஊர்வலமாகக் கோவிலை அடைந்தனர். இந்தஊர்வலக்காட்சி இக்கிராமத்தில் என்றும் நடந்தேறியிராத ஓர்காட்சியாயிருந்தது.

இத்திருவிழா ஞாபகார்த்தமாக ஆலயமுன்றிலில் நிறுவிநிற்கும் கோபுரத்தில் நவமான பெரிய அலங்காரகடிகாரம்ஒன்று அதிமேற்றிராணியாண்டவரால் திரைநீக்கஞ் செய்யப்பட்டதன்மேல் பக்தர்களின் மனதைஉருக்கத்தக்க காட்சியளிப்பனவாய்க் கிறீஸ்துநாதரின் திருப்பாடுகளைத் தியானிக்கச்செய்யும் சிலுவைப்பாதைச் சுரூபங்களும் அவரால் ஆசீர்வதிக்கப்பட்டன. பின்னர் பல்லாயிரக்கணக்காக வந்து குழுமியிருந்த பக்தர்களும், சிறுவர் சிறுமியரும் பங்குக்குருவானவருடனும், அதிமேற்றிராணியார், ஏனைய குருமார், கன்னியாஸ்திரிகளுடனும் சேர்ந்து பக்தியருட்சியாகத் திருச்சிலுவைப்பாதைப் பத்திமுயற்சிநடத்தினர்.

ஈற்றில் பரிசுத்த அன்னையின் பக்தர்கள் அனைவரினதும் ஏகோபித்தசெபத்தினுடனும், வாழ்த்தொலியுடனும் சதாசகாயமாதாவின் நோவனைநடைபெற்று, கட்டளைக்குரவர்வாசித்த ஒப்புக்கொடுக்குஞ் செபத்துடனும், அதிமேற்றிராணியாண்டவர் அருளிய திவ்விய நற்கருணை ஆசீர்வாதத்துடனும் விழா முற்றுப்பெற்றது.

J. B. S.

## அரிப்பு பாடசாலைத் திறப்புவிழா

சென்ற 19-3-55 சனிவாரம் ஊரவர்களுக்கு ஓர்குதூகலதினமே. அதிகாலை 7 மணிக்குக் கட்டளைக்குரவர் வண. ஏ. ஞூயேசுவாமியவர்களால் சஞ்சூசைமாதவரின் திருநாட்பாடற்பூசை நிறைவேறியதன்மேல் சற்பிரசாதஆசீர்வாதம் வழங்கப்பட்டது. பின்னர் அன்றுசாயந்தரம் 6-30 மணிக்கு ஊரவர்களும், மற்றும் அயல்கிராமங்களிலிருந்துவந்த ஏராளமான மக்களும் கூடிநிற்க, வண. கட்டளைக்குரவர் தமதுஅயராமுயற்சியால் ஒருமாத காலத்துள் கட்டியெழுப்பி முற்றுப்பெறச்செய்த மாபெரும்பாடசாலைக் கட்டடத்தின்வாசலில் மாட்டப்பட்டிருந்த நாடாவைக்கத்தரித்து, மக்களின்காரகோஷங்கள் மத்தியில் அலங்கரிக்கப்பட்டிருந்த பாடசாலைமண்டபத்துள் பிரவேசித்ததும் பெரியோரால் மலர்மாலை அணியப்பெற்றுப் பாடசாலையை ஆசீர்வதித்து, தாம்அப்பாடசாலையைக்கட்டிய நோக்கத்தையும், அதில் தம்முடன் ஒத்துழைத்த ஊர்ப்பெரியார், சிறியார், தொழிலாளர்கள் அனைவரையும் நினைவூட்டி நன்றிகூறலாயினர்.

அதன்பின் பாடசாலைத் தலைமை ஆசிரியர் ஏ. எம். குலாஸ்அவர்களால் பாடசாலை வரலாறுபற்றியும், கல்வியின் முன்னேற்றம்பற்றியும், பாடசாலைக் கட்டடவேலைக்கு உதவிபுரிந்த குரவர், பெற்றோரைப்பற்றியும்பேசி வண. கட்டளைக்குரவர் தலைமையில் பெற்றோர் தினவிழாவை ஆரம்பித்துவைத்தார்.

சிறுமியர்நடனங்கள், பாலியர் பாடல்கள், ஆங்கில, சிங்கள, தமிழ்ப் பாஷைகளில் ஹாஸ்யமான கமிக்குகள், நடித்தல்கள் சபையோரைக்கவர்ந்தன. இவற்றைத்தொடர்ந்து பாடசாலை ஆசிரியா வி. குருசுமுத்து அவர்களால் "பெற்றோரும, ஆசிரியரும் ஒத்துழைத்தல்" பற்றி ஓர்சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. பெற்றோர் விழாவின் முடிபுனைவாக ஆதாம் - ஏவாள் டிறாமா நடிக்கப்பெற்று இனிதே விழா முடிவுற்றது.

சே. பற்றிக் குருஸ்,
மாணவர்சங்க காரியதரிசி.

## முதல்நன்மை விழா

தபசுகாலத்தின் 5-ம் ஞாயிற்றுக்கிழமை 27-3-55 பறபபாங்கண்டல் பாடசாலைமாணவர்கட்கும், பெற்றோர்க்கும் பரவசமளிக்கும் ஓர்குதூகலமான தினமாயிற்று. எமதுகட்டளைக்குரவர் வண. எச். மொறேசுவாமியவர்கள் இவ்வருடஆரம்பத்திலேயே பாடசாலை ஆசிரியர்களின் துணையோடு 32 பிள்ளைகளுக்கு முதல்நன்மை வழங்கும் முயற்சியில் ஈடுபடலாயினர். அதனுல் உயிலங்குளத்திலிருந்து அடிக்கடி பாடசாலைக்குச் சமுகந்தந்து பலதினங்களில் திவ்வியபூசைநிறைவேற்றியும், ஆசிரியர்கள் மூலம் ஞானோபதேசப் பாடங்களை விளக்கத்துடன்படிப்பித்தும் பூரணதிருப்தியடைந்தார். பின்னர் 27-3-55 காலை 8 மணிக்குப் பாடசாலையிலிருந்து குருசேந்தியமரணவர்கள் முன்செல்ல, வெண்ணுடையணிந்தமாணவர்கள் இருவரிசையாகப் பின்செல்ல, சுவாமியாரும், ஆசிரியர்களும் அவர்களைத்தொடர்ந்துசென்று அர்ச். சிந்தாத்திரைமாதா கோவிலில் கூடியிருந்த திரளான கிறீஸ்தவர்களுடன் சேர்ந்துகொள்ளவே, சுவாமியார் பூசைப்பலி ஒப்புக்கொடுத்தனர். அவ்வேளை புதுநன்மைபெற்றபிள்ளைகளுடன் ஏனையபலமாணவரும், பெற்றோரும், ஆசிரியருமாகத் திரளானோர் திருவிருந்தருந்தினர். பூசை முடிந்தபின் அதேவரிசையாகப் பாடசாலையை அடைந்து காலைப்போசனம் அருந்தியபின் சொற்பொழிவுகள்மூலமும், சிறு காணிக்கைகள்மூலமும் சுவாமியாருக்குத் தங்கள்நன்றியைத் தெரிவித்து மகிழ்ந்தனர். இப்படியான அழகிய முறையிலே அமைதியானநிலைமையில் முதல்நன்மைவிழா முன்னர் இங்கு நடைபெற்றதில்லையென்று பெற்றோரும், மற்றோரும் புகழலாயினர்.

ச. ஆனுச்சி,
பாடசாலைமாணவி.

## பிரியாவிடை வைபவம்

புத்தள — சலாபப்பகுதித் தமிழ்ப் பாடசாலைகளின் வித்தியாதரிசியாயிருந்து சமீபத்திலே கண்டிப்பகுதிக்கு மாற்றமாகிச் செல்லவிருக்கும் திரு. கே. கனகசபாபதி, பி. எஸ்சி. அவர்கட்குப் பிரியாவிடைகூறுமுகமாகக் கடந்த 26-3-55 சனிக்கிழமைகாலை 10மணிக்குச் சலாபம், தமிழ்ப்பெண்பாடசாலை மண்டபத்தில் வடமேல்மாகாண தமிழாசிரியர்களின் கூட்டமொன்று புத்தள-சலாபப்பகுதி உதவி மாகாணஅதிபர் திரு. பி. ஆர். தேவராஜன் அவர்கள்தலைமையில் நடைபெற்றது. ஆரம்பத்திலே பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டதும் மாணவிகள் வரவேற்புக்கீதம் படித்துத் தலைவர்க்கும், வித்தியாதரிசிக்கும், சலாபமேற்றிராசன கத்தோலிக்க பாடசாலைகளின் பொதுமுகாமைக்காரர் அதிவண. மைக்கல் பெரேரா சுவாமியாருக்கும், சலாபநகர் ஆசனக்கோவில் கட்டளைக்குரவர் அதிவண. கயித்தான் பெர்னுண்டோப்பிள்ளை சுவாமியாருக்கும் மாலைகள்சூட்டினர். பின்னர் ஆசிரியர்கள்சார்பாக அழகிய சித்திரவேலைப்பாடமைந்து, பொன்னட்சரங்களால் பொறிக்கப்பட்ட பிரியாவிடைப் பத்திரமொன்று படித்துச் சமர்ப்பிக்கப்பட்டதும் சிற்றுண்டி உபசாரணை நடைபெற்றது. அதன்பின் ஆசிரியர் திரு. வீ. எஸ். பிள்ளை, ஆசிரியர் திரு. டபிள்யு. எலியாஸ் லோவ், ஆசிரியர் திரு. இரத்தினசாமி, ஆசிரியர் ஜனுப் எம். எச். எம். ஏ. றசாக் என்பவர்கள் பிரியாவிடைநாயகரின் சிறந்த சேவைகள், குணநலன்களை வியந்து இனியசொற்பொழிவுகளாற்றினர். வித்தியாதரிசியவர்கள் எழுந்து அனைவர்க்கும் நன்றித்துதிகூறினுர். தலைவர்அவர்கள் தம்முடிபுரையில் வித்தியாதரிசியையும், ஆசிரியர்களையும் பாராட்டலாயினர். ஈற்றில் மாணவிகளின் பிரியாவிடைக்கீதத்துடன் கூட்டம்சுபமே முடிவுற்றது.

— நிருபர்

## 38 புதியடக்றர்மார்

வைத்திய பட்டங்களுக்கென்று இலங்கைச்சர்வகலாசாலை இம்மாதத்தில் நடத்திய ஈறுந்தபரீட்சையிலே புதியடக்றர்மாராக 38 பேர் அரங்கேறியிருக்கின்றனர். இவர்களில் ஆர். அமரசிங்கம், வி. எஸ். மகேசன், வி. பரமேஸ்வரம், செல்வி ஆர். இராசசூரியர், எம் சோமசுந்தரம், எஸ். ஜே. ஸ்ரீபின், ரி. வர்ணகுணம், கே. பாலகுமாரன், கே. பாலசுப்பிரமணியம், செல்வி பி. குமாரசாமி, ஏ. ரி நவரட்ணம், எம். இராசரட்ணம், எஸ். சிவப்பிரகாசம், ஜே. ரி. சேவியர்என்பவர்கள் தமிழர்களாவர்.

## ஐம்பதுலட்சம்ரூபா மான்யம்

இலங்கையில் நடைபெறவிருக்கும் புத்தஜயந்திக் கொண்டாட்டத்துக்கு அரசாங்கமான்யமாக 50 லட்சம் ரூபா கொடுப்பதென்று சென்றவியாழக்கிழமை மந்திரிசபை தீர்மானித்திருக்கிறது. அரசாங்கம்இதற்கு ஒருகோடி ரூபா மான்யமளிக்க வேண்டுமென உள்நாட்டுமந்திரியார் திரு. ஏ. இரத்நாயகஅவர்கள் அப்போதுகேட்டிருந்தார்.

## அமெரிக்க புத்தகக்காட்சி

அமெரிக்க தகவல்பகுதியானது வடமாகாண ஆசிரியர்சங்கத்தின் ஆதரவிலே யாழ்ப்பாண நகரமண்டபத்தில் அடுத்தசித்திரை 1-ம், 2-ம் திகதிகளாகிய நாளை வெள்ளிக்கிழமையும் நாளை நின்றுவரும சனிக்கிழமையும் அமெரிக்க புத்தகக்காட்சிஒன்றை நடத்தவிருக்கின்றது. இந்தக் காட்சியிலே பலஅபூர்வமான அமெரிக்கபுத்தகங்கள் இடம்பெறும். இந்தக் காட்சியைக் கண்டுகளித்து நலமடையுமாறு யாழ்ப்பாணமக்கள் அழைக்கப்படுகின்றார்கள். நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்குக் காட்சிஆரம்பமாகும்.

## வறியகமக்காரனுக்கு வந்தஅதிர்ஷ்டம்

காலி ஜிம்கானாக்கிளப் சுவீப்பிலே முதலாவதுபரிசாக ஆகலவத்தையைச் சேர்ந்த போபிட்டிய தோட்டத்தில் வேலைசெய்யும் ஓர் ஏழைக் கமக்காரனாகிய எட்வின் றெட்றிக்கோஎன்பவருக்கு 1,94,541 ரூபா கிடைத்திருக்கிறது. இவருக்குத் தற்போதுவயது 29. இவர் தனதுசொற்ப உழைப்பைக்கொண்டு தன்னுடையமனைவியையும், 11, 5 வயதுடைய இருபிள்ளைகளையும் மிகுந்தகஷ்டத்துடன் காப்பாற்றிவருகிறார். கமமுயற்சியால் கிடைக்கும் வருமானம் போதாமையினுல் போபிட்டியதோட்டத்தில் றப்பர்ப்பால் வெட்டுவோராகவும் வேலைசெய்துவருகிறார். இவர் தான்வாங்கிய சுவீப்டிக்கெற்றைப் பிறகு தனதுகூலியில் கழித்துக் கொள்ளும்படிகூறித் தோட்டக்கங்காணியிடம கடனுகவேவாங்கினார்.

## ஆசிரியர் தேவை

பின்வரும் கத்தோலிக்க புதுப்பாடசாலைகளுக்குப் பயிற்றப்பட்ட அல்லது பயிற்றப்படாத தாரதாரப்பத்திரம்பெற்ற தலைமைஆசிரியர் தேவை. இப்பாடசாலைகள் உதவி நன்கொடைப்பணம் பெறும் பதிவுபெற்ற பாடசாலைகளல்ல. இளைப்பாற்றுவேதனம்பெறும் தாரதாரப்பத்திரம்பெற்ற ஆசிரியர்களும் விண்ணப்பம் அனுப்பலாம்.

1. இலுப்பைக்கடவை
2. செட்டிகுளம்
3. தலைமன்னார் பீயர்

Gen. Manager,
R. C. Schools,
28-3-55. Bishop's House, Jaffna.

## பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம், மண்டைதீவில் வசிக்கும் வஸ்தியாம்பிள்ளை யக்கோ அல்லது பேதுருவாகிய யான் எனதுபெயரை இன்றுதொடக்கம வஸ்தியாம்பிள்ளை பேதுருப்பிள்ளையெனப் பாவித்துக் கையொப்பமிடுவேனென்று இத்தால் அறிவிக்கிறேன்.

**வஸ்தியாம்பிள்ளை பேதுருப்பிள்ளை**
மண்டைதீவு, 29-3-55

## விஷத்திலிருந்து புதியமருந்து

வேதனையைப் போக்குவதற்காக நாகபாம்பின விஷத்திலிருந்து புதிதாகஓர் மருந்து கண்டுபிடித்துத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றிய விபரம் அமெரிக்கவிஞ்ஞான் முன்னேற்றசங்க கட்டடத்திலே சமர்ப்பிக்கப்பட்டுள்ள பலஅறிக்கைகள்ஒன்றில் அடங்கியிருக்கிறது. நாகபாம்பின விஷத்திலிருந்து தயாரிக்கப்பட்டுள்ள இந்தவேதனைநீக்க மருந்தானது நாட்பட்ட கடுமையான வேதனையைப் போக்குவதற்கெனக் கையாளப்படும் மார்பைனுக் சப்பதிலாகப் பிரயோகிக்கப் படுகிறதொன்று பால்தமோரிலுள்ள மவுண்ட்சீனுய் ஆஸ்பத்திரியைச்சேர்ந்த டக்றர்டேவிட் மாக்ட்கூறுகின்றார். இந்தமருந்தின் பெயர் "கோப்றூ டாக்ஸின்" என்பது.

## தேயிலைக்குச் சமாதி

"இந்தியாவிலே-சௌராஷ்டிராவில் மேஹிஸானுப்பகுதியிலுள்ள தோதிவாலாகிராமத்தில மக்களும், கடைக்காரரும்சென்ற 11-ந்திகதியன்று தேயிலைக்குக் கடைசிமரியாதை செலுத்தினர். சௌராஷ்டிர மக்களிடையே தேயிலைப்பானம் செய்யக்கூடாதென்று சிலமாதங்களுக்குமுன் ஓர்பிரசாரத்தை ஆரம்பித்தனர். அன்று அக்கிராம மக்கள் எல்லோரும்சேர்ந்து ஒருதேயிலைப்பைக்கற்றுக்கு ஈமக்கிரியைகள் நடத்தினார்கள். வாத்தியங்களுடன் போலிப்பிரேத ஊர்வலமும்நடந்தது. அதுமயானத்திலே அடக்கம்செய்யப்பட்டது. இனித்தேயிலைப்பானத்தைத் தீண்டுவதில்லைஎன்று மக்களும், இனித்தேயிலைவிற்பதில்லைஎன்று கடைக்காரர்களும் சபதம்பூண்டனர்" என்றசெய்தி சென்னைப்பத்திரிகைஒன்றில் பிரசுரமாகியுள்ளது. அளவோடு தேயிலைப்பானம் அருந்துவதால் உடலுக்குக் கெடுதியொன்றும்ஏற்படுவதில்லை தக்கவிதமாகத் தயாரிக்கப்பட்ட தேநீர் உடலுக்கு உற்சாகத்தை மட்டுமன்றிப் புத்தியைக்கொண்டு வேலைசெய்பவர்களுக்கு ஓரளவுதெம்பும் அளிக்கிறது. ஆனுல், தேயிலையை மயானத்தில் அடக்கம்பண்ணியவர்கள் கள், சாராயம், அபின்போன்ற பண்டங்கள்மீது நாட்டம்கொள்ளாமலிருக்க வேண்டுமேயென்பதுதான் இப்பொழுது புதிதாகக்கிளம்பியுள்ள பிரச்சினை.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, March 31-1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org